வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 17.06.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 193 | பக்கங்கள் : 16




# சீனாவின் உள்விவகாரங்களில் ஐ. நா. சபை தலையிடக்கூடாது!

## இலங்கை பிரதிநிதிகள் வலியுறுத்து

ஜெனிவா, ஜூன் 17

**சீனாவின் உள்விவகார பிரச்னைகளில் தலையிட வேண்டாம் என்று ஐக்கிய நாடுகள் சபையிடம் இலங்கை கேட்டுள்ளது. அத்துடன், ஒரே சீனா கொள்கையையே இலங்கை கடைப்பிடிக்கிறது. இலங்கையும் அதே வழியையே தொடர்ந்தும் பின்பற்றுகிறது என்று ஜெனிவா சென்றுள்ள இலங்கை பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.**

ஐக்கிய நாடுகள் சபையின் 60/251 மற்றும் 48/141 மனித உரிமைகள் பேரவையின் பணிகள், பக்கச்சார்பற்ற தன்மை, தெரிவு செய்யாமை, ஆக்கபூர்வமான சர்வதேச உரையாடல் மற்றும் ஒத்துழைப்பு ஆகிய கோட்பாடுகள் வழிநடத்தப்பட வேண்டும் என்றும் அந்தப் பிரதிநிதிகள் மேலும் கூறினர்.

சீன அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் சின்ஜியாங் மாகாணத்தின் உய்குர்

15

## அந்நிய செலாவணி 34 வீதம் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன். 17

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை பணியாளர்களினால் அனுப்பப்படும் அந்நிய செலாவணி 34 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

இதன்படி, கடந்த ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில், மே மாதம் அந்நிய செலாவணி 34 சதவீதம் அதிகரித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் பதிவான 249 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணி மே மாதத்தில் 304 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. (அ)

## அரசின் பேச்சாளராக ரணில்!

### ராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன். 17

21ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டு அது முழுமையாக பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், இந்தியாவே இலங்கைக்கு அதிகமான உதவிகளை வழங்கி வருவதால் காற்றாலை திட்டத்தை அதானி குழுமத்

15

## 7 வயது மாணவியை அடித்து துன்புறுத்தினார் ஆசிரியை!

யாழ்ப்பாணம், ஜூன். 17

சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் தரம் இரண்டில் கல்வி பயிலும் மாணவியை அடித்துத் துன்புறுத்தியமை தொடர்பில் சம்பந்தப்பட்ட ஆசிரியைக்கு எதிராக விசாரணைகளை சிறுவர் பாதுகாப்புப் பிரிவு முன்னெடுத்துள்ளது.

15

## ஜூன் 24ஆம் திகதியின் பின்னரே எரிபொருள் விநியோகம் சீராகும்!

### பெற்றோல் ரூ. 74, டீசல் ரூ. 56 உயரலாம்

கொழும்பு, ஜூன் 17

எரிபொருள் விலை அதிகரிப்பு எதிர்வரும் 24ஆம் திகதி நடைமுறைக்கு வரும். அதுவரை எரிபொருள் விநியோகம் சீரமைக்கப்படாது

15

## காங்கேசன்துறை வழியாக இறக்குமதிக்கு அனுமதி வழங்கினால் ஒரு இரவிலேயே தீர்வு!

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூன். 17

எரிபொருள், சிமெந்து, உரம் மற்றும் அத்தியா வசிய பொருட்களை இந்தியாவிலிருந்து காங் கேசன்துறை துறைமுகம் வழியாக இறக்குமதி செய்யும் திட்டத்திற்கு அனுமதித்தால் ஒரு இரவிலேயே தீர்வு என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடற்தொழிலாளர்கள், விவசாயிகள், போக்குவரத்து உள்ளிட்ட சங்கங்கள் இணைந்து எரிபொருள் பெற்றுக்கொள்வது தொடர்பில் கேட்டுள்ளார்

15

## மீண்டும் எரிபொருள் கிடைக்கும் திகதியை தற்போது கூறமுடியாது

### அமைச்சர் காஞ்சன விஜேசேகர

கொழும்பு, ஜூன். 17

இதுவரை எரிபொருள் நிறுவனங்களுக்கு 735 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தவேண்டியுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அத்தோடு, மீண்டும் நாட்டுக்கு எரிபொருள் கிடைக்கும் திகதி தொடர்பில் தற்போது சரியாக

15

## 50000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசு முடிவு!

கொழும்பு, ஜூன். 17

இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் 50,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்குத் தேவையான நிதியை இந்தியக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்துக்கு ஒதுக்குவது என பிரதமர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்

15

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

கொழும்பு, ஜூன். 17

நாடு முழுவதும் உள்ள அனைத்து அரச மற்றும் அரச அங்கிகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு இன்று வெள்ளிக்கிழமை விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு கல்வியமைச்சு இதனைத் தெரிவித்

15

## இலங்கைக்கு அமெரிக்கா 6 மில்லியன் டொலர் நிதி!

### அவசர உதவியாக வழங்க முடிவு

கொழும்பு, ஜூன். 17

இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக 6 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க உள்ளதாக அமெரிக்கா நேற்று அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் எதிர்பார்க்கப்படும் நிதி திட்டத்துக்காக, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி, தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்த இலங்கைக்கு உதவும் வகையில் அமெரிக்கா இந்த நிதியுதவியை வழங்குகிறது.

பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இலங்கை

15

## இப்படியும் நடக்கிறது...!

சுவிற்சர்லாந்தில் இருந்தபோது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளை ஜனரஞ்சகப்படுத்தியவர் நடராஜா முரளிதரன் என்ற முரளி.

அவர் தனது முகநூலில் இந்த ஊர்க்குருவியை வம்புக்கு இழுத்திருக்கின்றார்.

'ஈழநாடு ஊர்க்குருவிக்கு ராஜபக்ஷக்களை, பசிலை காப்பாற்றுவது ரணில்தான். அதை ஏன் வடலிக்கை நின்று உருட்டுறியள்' என்று கேட்டிருக்கின்றார்.

'நாங்கள் எங்கே வடலிக்கை பதுங்கியிருந்து உருட்டுறம்? அல்லது, வடலியை விட்டு ஓடி பல்லாயிரம் மைல்களுக்கு அங்கால பதுங்கியிருந்துகொண்டு பேஸ்புக்கிலையா உருட்டுறம்? நட்ட நடு யாழ்ப்பாணச் சந்தியிலை நிண்டுதானே உருட்டுறம்' என்று சொல்லாமலும் இருக்கமுடியவில்லை.

நேற்றைய தினமும் இந்தப் பத்தியில் இந்த விடயம் குறித்து எழுதியிருந்ததால் இனியும் எழுதவேண்டிய தேவையில்லை என்று நினைக்கின்றேன். நண்பர் முரளி இயக்கத்தில் இருந்தபோதிலும் சரி, இப்போதும் சரி தனக்கு சரி என்று பட்டதை கண்களை மூடிக்கொண்டு ஆதரிக்கக்கூடியவர் என்பதால் அதனை விட்டுவிடுவோம்.

இந்தப் பத்தியில் சில தினங்களுக்கு முன்னர், சம்பந்தன் ஐயாவின் இயலாமை பற்றி குறிப்பிட்டிருந்தோம். தந்தை செல்வாவைப்போல, அவர் பேசுவதையும் அருகில் இருப்பவர்களால்கூட கிரகிக்கவோ கேட்டு விளங்கிக்கொள்ளவோ முடியவில்லை என்று எழுதியிருந்ததைப் படித்துவிட்டு, ஒரு நண்பர் தொடர்பு கொண்டிருந்தார்.

தந்தை செல்வாவும் கடைசியாக பாராளுமன்றத்தில் இருந்தபோது, அமிர்தலிங்கம் பாராளுமன்றில் இருக்கவில்லை. அவர் தோல்வியடைந்துவிட்டார். அதனால், தந்தை செல்வா தானே கடைசிவரை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவராக இருந்தார். இப்போது மட்டும் நீங்கள் ஏன் சம்பந்தனின் இடத்திற்கு ஒரு மேய்ப்பர் தேவை என்று எழுதுகின்றீர்கள் என்று கேட்டிருந்தார்.

அவரது கோரிக்கை நியாயமானதுதான். ஆனால், தந்தை செல்வா கடைசியாக பாராளுமன்றில் இருக்கும் போது அமிர்தலிங்கம் அங்கு இல்லாதபோதிலும்கூட, அவரோடு சிந்தனைச் சிற்பி என்று வர்ணிக்கப்பட்ட கோப்பாய் சி. கதிரவேற்பிள்ளை, மானிப்பாய் வி. தர்மலிங்கம், சாவகச்சேரி வி. என். நவரத்தினம் என்று ஒரு தலைவர் பட்டாளமே இருந்தது. ஆனாலும்கூட, அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் தந்தை சொல்வாவின் ஆலோசனையின் பேரிலேயே நடந்தது.

இந்த ஊர்க்குருவி, 'ஈழநாடு'வில் பணியாற்றிய அந்த எழுபதுகளின் கடைசிக்காலத்தில், ஞாயிறு வாரமலரின் முதல் பக்கத் தலைப்புச் செய்தியை தயாரிக்கும் பணியை அப்போதைய வாரமலர் ஆசிரியராக இருந்த 'சசிபாரதி' சபாரத்தினம் வழங்கியிருந்தார்.

ஒரு கேள்வியை ஒரே கட்சியிலுள்ள மூவரிடம் கேட்டு, அவர்கள் என்ன பதில் சொல்கின்றார்களோ அதனை செய்தியாக்குவதுண்டு. தமிழரசுக் கட்சியிடம் அல்லது கூட்டணித் தலைவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டால் அவர்கள் தனித்தனியே சொல்லும் பதிலை தொகுத்து வெளியிடுவதுண்டு. அவ்வாறு வெளியிட்ட செய்தியில் ஒருபோதுமே ஒன்றுக்கொன்று முரண்பாடு இருந்ததில்லை.

இன்று இருக்கும் தலைவர்களிடம் ஒரே கேள்வியைக் கேட்டால் நிச்சயம் ஒவ்வொருவரும் வெவ்வேறு பதில்களைத்தான் தருவார்கள் என்பது தெரிந்ததுதான். அது மாத்திரமல்ல, ஒவ்வொருவரும் என்ன செய்கின்றார்கள் என்பதே கட்சியின் தலைவருக்கு தெரிந்திருப்பதும் இல்லை. அதனால்தான், அவர்கள் அனைவரையும் கட்டி மேய்ப்பதற்கு சரியான மேய்ப்பர் தேவை என்று எழுதினோம் என்று நண்பருக்கு விளக்கமளிக்க வேண்டியிருந்தது.

தந்தை செல்வா உயிரோடு இருந்தபோது, அவர் எழுபத்திரண்டில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்திருந்தார். அப்போது பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கமும் இருக்கவில்லை. அந்த நேரத்தில் சாவகச்சேரி வி. என். நவரத்தினம் பாராளுமன்றக் குழுத் தவைராக இருந்தார். எழுபத்தைந்து இடைத்தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் பாராளுமன்றம் சென்ற தந்தை செல்வா, மீண்டும் பாராளுமன்றக் குழுத் தலைவரானார். பின்னர் அவர் மரணமாகும் வரை அவரே அந்தப் பதவியில் இருந்த போதிலும், பாராளுமன்றத்தில் கட்சியின் முக்கிய விடயங்களை கவனித்தவர் மானிப்பாய் தர்மலிங்கம் அவர்களே. அப்போது, அரசியல் நிர்ணய சபையில் தமிழரசுக் கட்சியின் சமஷ்டி கோரிக்கை அடங்கிய ஏழு அம்சக் கோரிக்கையையும் கட்சியின் சார்பில் தர்மலிங்கமே சமர்ப்பித்திருந்தார்.

ஆனால், பாராளுமன்றத்திற்கு வெளியே கட்சியின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தலைமைதாங்கியவர் அமிர்தலிங்கம். அதற்கு தந்தை செல்வா வழிகாட்டியாக இருந்தார். அவரே, தனக்குப்பிறகு அமிர்தலிங்கம் கட்சியை வழிநடாத்தவார் என்று பகிரங்கமாகவே அறிவித்துமிருந்தார்.

அதுபோல, சம்பந்தன் தனக்குப் பின்னர் யார் என்பதை கட்சிக்கும், முக்கியமாக அதற்கு வாக்களிக்கும் மக்களுக்கும் சொல்லவேண்டியது அவசியமானது மாத்திரமல்ல, அவசரமானதும் கூட!

**- ஊர்க்குருவி**

# காலிமுகத்திடல் போராட்ட ஆதரவாளர்கள் குருந்தூர்மலை பிரச்னையில் எங்கே சென்றனர்?

## இப்படி கேள்வி எழுப்புகிறது ரெலோ

யாழ்ப்பாணம், ஜூன் 17

காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. அவர்களுடைய நியாயப்பாட்டை நாங்கள் நன்றாக புரிந்துகொள்கிறோம். ஆனால், தமிழர் பிரச்னையை பெரும்பான்மை இனத்தவருக்கு தெளிவுபடுத்துகிறோம் - விளக்குகிறோம், அவர்களோடு கலந்துரையாடுகிறோம் என்றெல்லாம் கூறியவர்கள் குருந்தூர் மலை விவகாரத்தில் எங்கு சென்றார்கள் என கேள்வியெழுப்பியுள்ளது தமிழ் தேசிய கூட்டமைப்பு.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் ஒன்றான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஊடகப் பேச்சாளர் சுரேன், இந்த கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்படுகின்ற குருந்தூர் மலை விவகாரம் மதப் பிரச்னைக்கு அப்பாற்பட்டது. பௌத்த மதத்தின் பெயரால் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அபகரித்து, அங்கு சிங்கள குடியேற்றங்களை நிறுவுவதும் அதனூடாக எங்கள் குடிப்பரம்பலை சிதைப்பதற்கும் முயல்வது இனவழிப்பு நடவடிக்கையாகவே கருதப்பட வேண்டும். இந்த நடவடிக்கைக்கு எதிராக காலி முகத்திடலில் இருக்கும் போராளிகள் ஏன் குரல் கொடுக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது.

அதையும் தாண்டி தமிழர் பிரச்னையை பெரும்பான்மை இனத்தவருக்கு தெளிவுபடுத்துகிறோம், விளக்குகிறோம். அவர்களோடு கலந்துரையாடுகிறோம் என்றெல்லாம் கூறியவர்கள் குருந்தூர்மலை விவகாரத்தில் தாங்கள் இணைந்து போராடிய பெரும்பான்மை இன சகோதரர்களிடம் குருந்தூர் மலையில் பௌத்த சின்னங்களை நிறுவ முயல்வதற்கு எதிராக குரல் கொடுக்க கோரவில்லையா?

காலிமுகத்திடல் போராட்டத்தில் தமிழர்கள் இணைய வேண்டும் என்று மூர்க்கமாக குரல் கொடுத்தவர்கள் சிலர் குருந்தூர் மலை விவகாரத்தில் கள்ள மௌனம் காப்பது ஏன்?

கைதட்டல் கிடைக்காது என்பதற்காகவா அல்லது காலி முகத்திடலில் போராடும் பெரும்பான்மை இனத்தின் மனம் நோகக் கூடாது என்பதா? எதற்காக மௌனம் காக்கிறார்கள்?

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்னையை புரிந்து கொள்ளாத எமது அடிப்படை கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாத அல்லது அங்கீகரிக்காத இந்தப் போராட்டத்தில் தமிழ் மக்களும் இணைந்து கொள்ள வேண்டும் அல்லது தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாங்கள் இணைந்து கொண்டு இருக்கிறோம் என்று கூறுபவர்கள் யதார்த்த நிலையை புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் கூடுகின்ற இடங்களில் எல்லாம் சென்று சத்தமெழுப்புவதன் மூலம் தமிழ் மக்களுடைய பிரச்னையை தீர்த்து விடலாம் என்று தமிழ் மக்களை நம்ப வைக்க முயல்வது கேலிக் கூத்தாகும். அது இன்று நிரூபணமாகியுள்ளது.

ஆகவே, தென்னிலங்கையில் நடக்கின்ற அரசியல் அதிகார சதுரங்க ஆட்டத்தில் தமிழ் மக்களை பகடைக் காயாக பயன்படுத்த இடமளித்து நேரத்தை வீணடிப்பதை தவிர்க்க வேண்டும். கடந்த கால அனுபவங்களில் இருந்து , நல்லாட்சி காலம் உட்பட நாம் பாடம் கற்றுள்ளோம். இந்த சந்தர்ப் பத்தை பயன்படுத்தி தமிழர் தரப்பாக பேரம் பேசுவதே தேவையானது.

தமிழ் மக்களுக்கு பயன் தரும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்பது பற்றியே நமது தரப்புக்கள் சிந்திக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம் என தெரிவித்துள்ளார். (ஐ)

# டீசல் என ஏமாற்றி தண்ணீர் விற்பனை

கொழும்பு, ஜூன் 17

எரிபொருள் வரிசையில் காத்திருந்த இருவரை ஏமாற்றி, டீசல் என தெரிவித்து, 60 லீற்றர் தண்ணீரை 3 கான்களில் விற்ற சம்பவம் ஒன்று பண்டா ரகமை பகுதியில் பதிவாகியுள்ளது.

இந்த 60 லீற்றர் தண்ணீரும் 24 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இவ்வாறு ஏமார்ந்தவர் முகம் கொடுத்தவர் சிறிய லொறி ஒன்றில் இளநீர் விற்கும் ஒருவர் என்றும் மற்றையவர் சிறிய லொறி ஒன்றின் சாரதி என்றும் தெரியவந்துள்ளது.

பண்டாரகமையிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு அருகில், இருவரும் 5 நாள்களாக காத்திருந்தபோது அருகில் இருந்த மற்றொரு நபருடன் நட்பு ஏற்பட்டுள்ளது.

பிறிதோர் இடத்தில் திருட்டுத்தனமாக எரிபொருள் விற்பனை செய்யப்படுவதாகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் புதிதாக அறிமுகமான நபர் குறித்த இருவரிடமும் தெரிவித்துள்ளார். இதை நம்பிய இருவரும், 24 ஆயிரம் ரூபாயை கொடுத்து 3 கான்களில் டீசல் என நினைத்து தண்ணீரை கொள்வனவு செய்து, தமது வாகனங்களுக்கு ஊற்றிய போது, அது தண்ணீர் என தெரியவந்துள்ளது. (ஐ)

# வலி. கிழக்கு தவிசாளருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 17

நிலாவரையில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு தடையாக அமைந்ததன் வாயிலாக தொல்லியல் திணைக்களத்தின் அரச கருமங்களுக்கு தடை ஏற்படுத்தினார் என வலி. கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷுக்கு எதிராகத் தொடாரப்பட்ட வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த வருடம் தொடரப்பட்ட இவ் வழக்கில் வழக்கினை முன்னொண்டு செல்வதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையினைப் பெறுமாறு தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதவான் திருமதி காயத்திரி சைலவன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, அச்சுவேலி பொலிஸார் மேலதிக அறிக்கையை சமர்ப்பித்ததுடன் சட்டமா அதிபரின் ஆலோனைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் மன்றில் தெரியப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# மன்னாரில் நீண்ட நாட்களின் பின் மண்ணெண்ணெய் விநியோகம்!

மன்னார், ஜூன் 17

மன்னார் நகர மத்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்ட நாட்களுக்கு பின்னர் நேற்று வியாழக்கிழமை மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது. நள்ளிரவு முதல் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மண்ணெண்ணெயை பெற்று வருகின்றனர்.

குறிப்பாக, ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கு 300 ரூபாய்க்கான மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றன. மண்ணெண்ணெய் விநியோகத்தில் முரண்பாடுகள் தோற்றம் பெறாத வகையில் செயல்பாடுகளை மேற்கொள்ள மன்னார் பிரதேச செயலாளரால் அந்தப் பகுதியில் கடமையாற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவகர்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குக் கடமைக்கு அழைக்கப்பட்டு அவர்களால் எரிபொருள் விநியோகம் மேற்பார்வை செய்யப்பட்டது. பொலிஸாரும், இராணுவத்தினரும் மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நீண்ட நாட்களுக்கு பின்னர் மன்னாரில் மண்ணெண்ணெய் விநியோகம் இடம் பெற்று வருகின்ற நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மண்ணெண்ணெய் பெற்று வருகின்றனர்.

ஈழநாடு
Eelanadu
17.06.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## தமிழ் தேசிய கட்சிகளின் மௌனம்?

பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்கும் முயற்சிக்கு, இந்தியா தொடர்ந்தும் உதவி வருகின்றது. இந்தியாவின் உதவிகள் தொடர்ந்தும் கிடைக்காது போயிருந்தால், இலங்கையின் நிலைமை மேலும் மோசமடைந்திருக்கும். ஆனால், இலங்கை மின்சார சபையின் தலைவர் வெளியிட்ட கருத்துக்கள் புதுடில்லியை சங்கடப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

மன்னாரில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள அதானி குழுமத்தின், காற்றாலை மின்சாரத் திட்டம் தொடர்பில், இந்திய பிரதமர் நரேந்திர மோடி அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக, ஜனாதிபதி தன்னிடம் கூறியதாக, மின்சார சபையின் தலைவர் தெரிவித்திருந்தார். தான் அவ்வாறு கூறவில்லையென்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மறுத்திருந்தார். இதனைத் தொடர்ந்து மின்சார சபையின் தலைவர், தனது பொறுப்பிலிருந்து வெளியேறியிருந்தார்.

இலங்கையின் திட்டங்களில், இந்திய பிரதமர் தலையீடு செய்து வருவதான ஒரு தோற்றம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது, அதானி குழுமத் தினரின், மன்னார் திட்டத்திற்கு எதிராக, கொழும்பில் ஒரு குழுவினர் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டிருக்கின்றனர். இந்தியா இந்தளவு உதவிகளை செய்துகொண்டிருக்கும்போது, கூட, இந்தியாவின் திட்டங் களுக்கு எதிர்ப்பு வெளியிடப்படுகின்றது.

நரேந்திர மோடி தலைமையிலான பி. ஜே. பி. மிகவும் பலமான நிலையில் ஆட்சியமைத்த காலத்தில், இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமே ஆட்சியிலிருந்தது. மகிந்தவின் சீன சார்பு அணுகுமுறைகள் தொடர்பில் புதுடில்லி அதிருப்திடைந்திருந்த காலமது. பி. ஜே. பி. ஆட்சிக்கு வந்திருந்த காலத்தில் கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலான உறவு சுமூகமாக இருக்கவில்லை. இது தொடர்பில் அப்போது பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ பகிரங்கமாகவே தெரிவித்திருக்கின்றார். அதாவது, இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் – சீனாவின் துறைமுக நகரத் திட்டத்தை கைவிடுமாறு, தன்னிடம் இரு முறை கூறியதாகவும், அவர் ஒரு புலனாய்வு மனிதனாக தன்னிடம் நடந்து கொண்டதாகவும் கோட்டாபய குறிப்பிட்டிருக்கின்றார். காங்கிரஸ் இருந்தபோது தங்களுக்குள் நல்ல உறவிருந்தது ஆனால், பி. ஜே. பி. ஆட்சிக்கு வந்ததிலிருந்தே தங்களுக்கிடையிலான உறவில் சிக்கல்கள் ஏற்பட்டன எனவும் கோட்டாபய தெரிவித்திருந்தார்.

ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்த பின்னர், இந்தியாவுடன் உறுவுகளை பலப்படுத்துவதில் கவனம் செலுத்தினார். எனினும், கிழக்கு கொள்கலன் முனைய விடயத்தில், கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் சரியாக நடந்துகொள்ளவில்லை. பின்னர் மேற்கு கொள்கலன் முனையத்தை வழங்கி, நிலைமைகளை சரிசெய்ய முயற்சித்தது. இதனைத் தொடர்ந்தே அதானி குழுமம் மன்னார் காற்றாலை திட்டத்தை முன்னெடுப்பதற்கான உடன்பாடுகள் எட்டப்பட்டன. இந்த விடயத்திலேயே, மோடி அழுத்தங்களை பிரயோகித்ததாகவே தற்போது சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன.

மின்சார சபையின் தலைவரது கருத்துக்கள் தொடர்பில் தமிழர் முற்போக்கு கூட்டணி தனது அதிருப்திகளை வெளியிட்டிருக்கின்றன. ஆனால், தமிழர் தாயகப் பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒரு திட்டம் தொடர்பில், சர்ச்சைகள் ஏற்படுகின்றபோது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும், இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதிய விக்னேஸ்வரன் கூட்டணியினரும் அமைதி காக்கின்றனர். உண்மையில் மன்னாரில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் ஆதரவு நிலையை வெளிப்படுத்த வேண்டும். நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றபோது, வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்க வேண்டியது கட்டாமானது. ஆனால், இவ்வாறானதொரு சூழலில் பொறுப்பற்ற வகையில், அரசாங்கம் செயல்படுவதை கூட்டமைப்பு கண்டித்திருக்க வேண்டும். ஆனால், வழமைபோல் தமிழ்த் தேசிய தரப்புக்கள் தங்களின் கையறு நிலையையே வெளிப்படுத்தியிருக்கின்றன.

# நாடு எதிர்பார்ப்பது விரைவான ஆட்சி மாற்றமே!

அலசுவது இராஜதந்திரி



இலங்கையில் “நல்லதங்காள்“ கதை நிகழ்வைப் போன்ற சம்பவங்கள் அரங்கேற ஆரம்பித்துள்ளதை நேற்று முன்தினம் வத்தளை பிதேசத்தை அண்டிய கதிரன பிரதேசத்தினூடாக செல்லும் களனி ஆற்றில் இடம்பெற்ற சம்பவமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

அங்கவீனமான பெண்ணொருவர் களனி ஆற்றின் அருகே வந்து தனது ஐந்து வயதான பிள்ளையை ஆற்றில் வீசிவிட்டு தாமும் ஆற்றில் குதிக்க முற்பட்ட போது அயலவர்கள் உடனடியாக செயலில் இறங்கி அப் பெண்ணை காப்பாற்றியுள்ளனர். ஆனால், அவரால் ஆற்றில் வீசப்பட்ட பிள்ளை ஆற்று நீரில் அடித்துச் செல்லப் பட்டுள்ளது. அந்தக் குழந்தையை வள்ளங்கள் மூலமாக தேடும் பணி முடுக்கி விடப்பட்டிருந்த போதிலும் பயனெதுவும் கிடைக்கவில்லை.

தற்சமயம் அந்தப் பெண் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் அத்தியாவசிய பண்டங்களுக்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்கும்போது, வறுமையின் ஓரத்துக்கே சென்ற அந்த ஊனமுற்ற அபலைப் பெண் உண்ண உணவின்றி தன்னையும் தன் குழந்தையையும் மாயத்து விடும் முயற்சியில் இறங்கியுள்ளதையே பூர்வாங்க விசாரணைகள் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

களனி ஆற்றில் தனது குழந்தையையும் வீசிவிட்டு தானும் தற்கொலை செய்ய முயன்ற அப்பெண்ணின் துயரமானது வறுமையின் கொடுமையால் கிணற்றில் தனது ஏழு குழந்தைகளையும் வீசிவிட்டு தானும் குதித்து உயிரை மாய்த்துக்கொண்ட நல்லதங்காள் கதையையே எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் குறிப்பாக, மக்கள் தற்போது வீதி மறியல் போராட்டங்களில் இறங்கியுள்ளமையையே காணமுடிகின்றது. நேற்று முன்தினம் தெஹிவளைப் பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு முன்பாக காலி வீதியில் வாகன சாரதிகள் வீதி மறியல் போராட்டத்தில் குதித்திருந்ததை காணமுடிந்தது.

எனவே, தற்போதைய அரச நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளும் பட்சத்தில் ஜனாதிபதியாலோ அல்லது அவரைச் சர்ந்திருப் போராலோ நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க முடியாதுள்ளமையே தெளிவாகியுள்ளது.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி பெரிதும் வீழ்ச்சி கண்டுள்ளது. அத்துடன், ஏனைய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராகவும் இலங்கை ரூபாயின் பெறுமதி பெரிதும் குறைவடைந்துள்ளது.

இத்தகைய, சூழ்நிலையில் இலங்கையில் பொருளாதாரத்தை சீர்செய்ய முடியாத ஜனாதிபதி கோட்டாபய அரசு பதவி விலகுவதை விட வேறு வழியில்லை என்பதே தற்போது தெளிவாகியுள்ளது. அத்துடன், முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான ஆர். சம்பந்தனும் தற்போதைய அரசு பதவி விலக வேண்டுமென்றே குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரான ஆர். சம்பந்தன் மேலும், கருத்து வெளியிடுகையில் சர்வதேச சமூகத்தின் மேம்பட்ட உதவிகளை இலங்கை பெற வேண்டுமானால் கூட தற்போதைய ஆட்சி கலைக்கப்பட வேண்டுமென்பதே நாட்டு மக்களில் பெரும்பாலானவர்களின் எதிர்பார்ப்பாக இருப்பதாகவும் ஆர். சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இன்றைய ஆட்சி கலைக்கப் பட்டு புதிய ஆட்சியொன்று தோன்றுமாயின் புதியவர்களால்கூட நாட்டை உடனடியாகவே பொருளாதார சீர்கேட்டிலிருந்து மீட்டுவிட முடியுமா? என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

ஏனெனில், எதிர்க்கட்சிகளில்கூட நம்பிக்கை தரும் விதத்தில் பொருளாதாரத்தை சீர்செய்யக்கூடியவர்கள் காணப்படாத நிலையில் இலங்கை பெருதும் வெளி உலக நிபுணத்துவத்தையே எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றே கருத முடியும்.


எது எப்படியிருந்த போதிலும் இன்றைய ஆட்சியாளர்களால் நாட்டை பொருளாதார ரீதியில் வலுவாக கட்டியெழுப்ப முடியாதென்பதே உறுதியாகியுள்ளது.

இந்நிலையில், களனி ஆற்றில் தனது ஐந்து வயது குழந்தையையும் வீசிவிட்டு தானும் அந்த ஆற்றில் குதித்து தற்கொலை செய்ய முயன்ற பெண்ணின் செயல் நாட்டில் பெரும்பாலான மக்கள் பசி பட்டினியால் வாடிக் கொண்டிருப்பதை எடுத்துக்காட்டியுள்ள அதேசமயம் உலக உணவுத்திட்டம் அதிர்ச்சி தரும் தகவலொன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் 66 சதவீனமானோர் நாளாந்தம் உண்ணும் உணவின் அளவை பெரிதும் குறைத்துள்ளனர் என்ற தகவலை பதினேழு மாவட்டங்களில் மேற்கொண்ட ஆய்வொன்றை மையமாக வைத்து உலக உணவுத் திட்டம் அறிக்கையாக வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், ‘நல்லதங்காள்’ பாணியில் பட்டினி மரணங்கள் மேலும் அதிகரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே கருதலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

உங்கள் செயலில் இருந்த தடைகள் விலகும். நினைத் தபடி நிறைவேற்றி மகிழ்வீர்கள். நிதி நெருக்கடி குறையும். உங்கள் முயற்சிகள் பலிதமாகும். உங்கள் செல்வாக்கு உயரும்.

**இடபம்**

யோசித்து செயல்பட வேண்டிய நாள். நீங்கள் எதிர்பார்த்த பணம் தாமதமாகும். உங்கள் செயலில் பின்னடைவு ஏற்படும். தைரியம் தேவையான நாள். வியாபாரத்தில் கவனம் தேவை.

**மிதுனம்**

தொழிலில் லாபம் உண்டாகும். நண்பர்களின் உதவி கிடைத்து மகிழ்வீர்கள். விரும்பும் ஒரு செயல் இனிதே நிறைவேறும். வெளிவட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

**கடகம்**

தடைகளைத் தாண்டி தொழிலில் வெற்றி பெறுவீர்கள். பிறரால் மதிக்கப் படுவீர்கள். எதிரிகள் பலமிழந்து போவார்கள். எதிர்பார்த்த நன்மை இன்று கிடைக்கும்.

**சிம்மம்**

பிள்ளைகளுடன் நேரத்தை செலவழிப்பீர்கள். குடும்பத்தை மகிழ்ச்சியில் திளைக்கும். நிம்மதி காண்பீர்கள். குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். விருந்தினர் வருகை உண்டு.

**கன்னி**

சரியான பாதையில் செல்லும் உங்களது தொழிலில் லாபம் அதிகரிக்கும். புதிய சொத்துகள் வாங்கும் முயற்சி நிறைவேறும். குடும்பம் மகிழ்ச்சியில் திளைக்கும்.

**துலாம்**

குடும்பத்தில் ஒருவர் நீங்கள் நினைத்ததை செய்து முடிக்க உதவி செய்வார். தொழிலில் உங்கள் முயற்சியால் லாபம் காண்பீர்கள். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். துணிச்சலுடன் செயலபடுவீர்கள்.

**விருட்சிகம்**

குடும்பத்திற்காக சுபச்செலவு செய்து மகிழ்ச்சி காண்பீர்கள். திட்டமிட்ட செயல் நிறைவேறும். உங்கள் செல்வாக்கு பொது இடங்களில் உயரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி கூடி வரும்.

**தனுசு**

மனம் ஒரு நிலையில் இல்லாமல் போகும். உங்கள் செயலில் குழப்பம் ஏற்படும். நீங்கள் எதிர்பார்த்த நன்மை தாமதமாகி கிடைக்கும். அவசரம் காட்ட வேண்டாம். தொழிலில் நெருக்கடி உண்டாகும்.

**மகரம்**

சில செலவுகள் மூலம் எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொள்வீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். எதிர்பாராத செலவுகளால் தடுமாற்றம் அடைவீர்கள். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**கும்பம்**

புதிய முயற்சி அனுகூலமாகும். உங்கள் நிதிநிலை உயரும். பழைய முதலீட்டில் இருந்து இன்று லாபம் உண்டாகும். பொன் பொருள் சேர்க்கை உண்டு. எதிர்பார்த்த பணம் உங்கள் வீடு வந்து சேரும்.

**மீனம்**

புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உங்களுடைய செயலை மற்றவர்கள் பாராட்டுவார்கள். அமைதி தேவையான நாள். நீங்கள் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வெளியூர் பயணத்தால் நன்மை கிடைக்கும்.

# தலைமையை கைப்பற்ற போட்டி; அணி மோதல்களும் அதிகரிப்பு!

*சென்னை, ஜூன் 17*

அ. தி. மு. க. பொதுச் செயலர் பதவியைக் கைப்பற்ற ஓ. பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தீவிரம் காட்டி வருகின்றனர். இருவரிடமும் கட்சியின் மூத்த தலைவர்கள் ஆகியோர் நேற்று முன்தினம் பேச்சு நடத்தினர்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, அ. தி. மு. கவில் ஓ. பன்னீர்செல்வம், பழனிசாமி இடையே அதிகாரப் போட்டி நிலவுகிறது. 2017 முதல் இருவரிடையே பனிப்போர் இருந்தாலும், பெரிதாக பிரச்னை எழவில்லை. இந்நிலையில், வரும் 23ஆம் திகதி அ. தி. மு. க. செயல்குழு, பொதுக்குழுக் கூட்டம் நடைபெறுகிறது.

கட்சிக்கு ஒற்றைத் தலைமை, மீண்டும் பொதுச் செயலர் பதவி பேச்சு எழுந்துள்ள நிலையில், இரு தினங்களுக்கு முன் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில், பெரும்பாலான மாவட்ட செயலர்கள் ஒற்றைத்தலைமையை வலியுறுத்தினர்.

இதையடுத்து, பொதுச் செயலர் பதவியைக் கைப்பற்றும் பணிகள் தீவிரமடைந்துள்ளன. இரு தரப்பு ஆதரவாளர்களும் பன்னீர்செல்வம், பழனிசாமி ஆகியோரை சந்தித்து ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இதனிடையே, பழனிசாமியிடம் நேற்றுமுன்தினம் ஆலோசனை நடத்திய முன்னாள் அமைச்சர்கள் சீனிவாசன், ஆர்.பி. உதயகுமார் ஆகியோர் நேற்று காலை பன்னீர்செல்வம் இல்லத்துக்கும் வந்து ஆலோசனை நடத்தினர். அவரை சமாதானப்படுத்தும் வகையில் பேச்சு நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. அவர்களிடம் பன்னீர்செல்வத்துக்கு பொதுச் செயலர் பதவி வழங்க வேண்டுமென அவரின் ஆதரவாளர்கள் தெரிவிக்கப்பட்டதாகத் தகவல்.

இதனிடையே, இரு தரப்பு சார்பிலும் சென்னையிலும் தமிழகத்திலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இந்நிலையில் இரு தரப்பினரிடையேயும் சுவரொட்டிகளை கிழித்ததாகக் கூறி மோதல்களும் இடம்பெற்று வருகின்றன. (ஐ)

# அ. தி. மு. க. பொதுக்கூட்டத்துக்கு தடை விதிக்க நீதிமன்று மறுப்பு!

*சென்னை, ஜூன் 17*

அ. தி. மு. க. பொதுக்குழுவுக்குத் தடை விதிக்க சென்னை உரிமையியல் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

அ. தி. மு. க. பொதுக்குழுவுக்கு தடை விதிக்க வேண்டும் என கட்சியின் நிர்வாகி ஒருவர் நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

அ. தி. மு. கவில் பொதுச் செயலாளர் பதவி இல்லாததால் இந்தக் கூட்டத்தை நடத்த தடை விதிக்க வேண்டும் என்றும் தான் ஓர் அ. தி. மு. க. நிர்வாகி என்ற முறையில் மனுத்தாக்கல் செய்துள்ளதாகவும் கூறினார்.

அதேநேரத்தில், வழக்கு தொடுத்தவர் தற்போது கட்சியில் இல்லை என்றும் பொதுக்குழுவுக்குத் தடை விதிக்கக் கூடாது என்றும் கூறி பன்னீர்செல்வம், பழனிசாமி இருவரும் இணைந்து கூட்டாக மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு மீது 4 வார காலத்துக்குள் வழக்கு தொடுநர் பதில் அளிக்கக் கூறி வழக்கின் விசாரணையை வருகிற ஜூன் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

வரும் 23 ஆம் திகதி அ. தி. மு. க. பொதுக் குழு கூட்டம் நடைபெறவிருப்பதால் முன்கூட்டியே அடுத்த விசாரணை கோரிய வழக்கு தொடுநரின் கோரிக்கையை சென்னை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இதன் மூலம் வருகிற 23 ஆம் திகதி அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டம் நடைபெறத் தடையில்லை என்று தெரிகிறது. (ஐ)

# 3 மாதங்களின் பின்னர் கொரோனாவால் மரணம்!


*சென்னை, ஜூன் 17*

தமிழகத்தில் 90 நாள்களுக்குப் பிறகு மீண்டும் கொரோனா உயிரிழப்பு பதிவாகியுள்ளது.

தஞ்சாவூரைச் சேர்ந்த 18 வயது இளம்பெண் எந்தவிதமான இணை நோயுமின்றி திடீரென கொரோனாவுக்கு பலியானதாக மக்கள் நல்வாழ்வுத் துறை தகவல் வெளியிட்டுள்ளது.

இது பொது மக்களை மட்டுமல்லாது மருத்துவத் துறையினரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ஒமைக்ரோன் மற்றும் அதன் உருமாற்ற வகைகளான பிஏ-4 மற்றும் பிஏ-5 வகை தீநுண்மிகள் இதுவரை உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தவில்லை.

ஒமைக்ரான் தொற்று தமிழகத்தில் ஊடுருவி கொரோனா மூன்றாம் அலையாக தீவிரமடைந்த போதுகூட உயிரிழப்பு விகிதம் அச்சப்படும் வகையில் இல்லை. இந்த நிலையில், வீரியம் குறைந்த அந்த தீநுண்மியால் தற்போது இணை நோய்கள் ஏதுமில்லாத



இளம்பெண் உயிரிழந்திருப்பது பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

அதிலும், அவரின் உயிரிழப்புக்கான காரணத்தை அறுதியிட்டுக் கூற இயலாத நிலை இருப்பதாக மக்கள் நல்வாழ்வுத் துறையே அதிகாரபூர்வமாக தெரிவித்திருப்பது மக்கள் மறந்திருந்த கொரோனா மீதான பயத்தை மீண்டும் அதிகரித்துள்ளது.

இதனிடையே மீண்டும் கொரோனா கட்டுப்பாடுகளை தீவிரமாகக் கடைப்பிடிக்குமாறு மக்களைக் கேட்டுள்ள தமிழக சுகாதாரத் துறை, அவற்றை மீண்டும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. (ஐ)

# ஜெயக்குமாரின் காரை வழிமறித்ததால் பதற்றம்!

*சென்னை, ஜூன் 17*

அ. தி. மு. க. அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரின் காரை பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

அ. தி. மு. க.வில் "ஒற்றைத் தலைமை" விவகாரம் வலுத்துதுள்ளது. இந்நிலையில், நேற்று சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் ஜெயக்குமார் உள்ளிட்ட 11 பேர் கொண்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஆலோசனையில் ஈடுபட்டனர்.

கூட்டத்தை முடித்துவிட்டு முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அ. தி. மு. க. அலுவலகத்தில் இருந்து புறப்பட்டார். அப்போது திடீரென ஜெயக்குமாரின் காரை பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் முற்றுகையிட்டு அவருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். பின்னர் கார் வேகமாக சென்றதால் சற்று நேரத்தில் நிலைமை சீரானது. இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

முன்னதாக, கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், பொதுக்குழுவில் நிறைவேற்றப்படவுள்ள தீர்மானங்கள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகவும் ஒற்றைத் தலைமை விவகாரம் குறித்து பேசப்படவில்லை என்றும் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் தான் அதுகுறித்து முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ஐ)

# முகத்துவாரம் துப்பாக்கிசூடு சந்தேகநபர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜுன் 17

கொழும்பு - முகத்துவாரம் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தொட்டலங்க பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 5 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், சந்தேக நபரிடமிருந்து தொலைபேசியையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். முகத்துவாரம் அளுத்மாவத்தை பகுதியில் கடந்த 06 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ச்சியாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# பதுளையில் மின்னல் தாக்கி மூவர் மருத்துவமனையில்!

## 12 குடியிருப்புக்களும் சேதம்

பதுளை, ஜுன் 17

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் பதுளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெல்பெத்தை தோட்டத்தில் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி 3 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மின்னல் தாக்கத்தால் 12 குடியிருப்புகளுக்கு பகுதி அளவில் சேதம்ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை பதுளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தெல்பெத்தை கெந்தகொள தோட்டத்தில் கடும் மழை மற்றும் மின்னல் தாக்கியுள்ளது. இதனால் குறித்த தோட்டத்திலுள்ள குடியிருப்புகள் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்தன. மின் உபகரணங்களும் சேதமடைந்துதன. குடியிருப்பில் வசித்த 3 பேருக்கு காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்துக் குறித்து உரிய அதிகாரிக்கு தெரிவித்துள்ள போதிலும் இதுவரையில் எந்தவித அரச அதிகாரிகளும் தமது அவதானத்தை செலுத்தவில்லை என அந்தப் பிரதேச மக்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்

பதுளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெல்பெத்தை கெந்தகொள தோட்டத்தில் தொடர்ச்சியாக இவ்வாறான மின்னல் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் விசாரணை நடத்துமாறு மாவட்ட மின்சார சபைக்கு தெரிவித்துள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (ஐ)

# தம்மிகவுக்கு எம். பி. பதவி; எதிராக வழக்குத் தாக்கல்!

கொழும்பு, ஜுன் 17

பஸில் ராஜபக்ஷவின் இராஜினாமாவை தொடர்ந்து ஏற்பட்ட, தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு பிரபல வர்த்தகர் தம்மிக பெரேரா நியமிக்கப்பட்டுள்ளமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 99 (அ) உறுப்புரை பிரகாரம், அவரது நியமனம் சட்ட விரோதமானது என குறிப்பிட்டே அந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் மற்றும் அதன் நிறைவேற்று பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

அரசியலமைப்பின் 99 (அ) உறுப்புரை பிரகாரம், சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட மாவட்ட வேட்பு மனுக்கள் அல்லது தேசியப் பட்டியலில் ஒருவரின் பெயர் சேர்க்கப்பட்டிருந்தால் மட்டுமே, அத்தகைய வெற்றிடத்தை நிரப்ப ஒரு நபர் பரிந்துரைக்கப்படுவதற்கு தகுதியுடையவர் என மனுதாரர் இந்த மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி அரசியலமைப்பின் 99 (அ) உறுப்புரையின் கீழ் சிறீ லங்கா பொதுஜன பெரமுன தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த தேசிய பட்டியலில் அல்லது 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்காக அந்தக் கட்சியால எந்தவொரு தேர்தல் மாவட்டத்திலும் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுவிலும் தம்மிக பெரேராவின் பெயர் இல்லை என சுட்டிக்காட்டும் மனுதாரர், அதனூடாக குறித்த நியமனம் நியாயமற்ற சட்ட விரோதமான செயல் என மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பெருந்தோட்டம், மின்சாரம் போன்ற பல வேறு துறைகளில் பல்வேறு வர்த்தக முயற்சிகளில் தம்மிக பெரேராவின் உரிமங்கள் தொடர்பில் மனுவில் சுட்டிக்காட்டியுள்ள மனுதார், பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சரவை அமைச்சராகவும் தம்மிக பெரேரா நியமிக்கப்படுவதன் ஊடாக அரசியலமைப்பின் 91 (1) உ சரத்து மீறப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரசியலமைப்பின் 10, 12,14 ஆம் உறுப்புரைகள் ஊடாக உறுதிச் செய்யப்பட்டுள்ள சிந்தனை, மனச் சாட்சி, சமத்துவம், கருத்து உள்ளிட்ட சுதந்திரங்கள் மீறப்படுவதாக அறிவிக்குமாறு குறித்த அடிப்படை மனு ஊடாக மனுதாரர்கள் கோரியுள்ளனர். (ஐ)

# இன்று முதல் யாழ். - கொழும்பு விசேட ரயில் சேவை ஆரம்பம்!

**யாழ்ப்பாணம், ஜுன் 17**

**யாழ்ப்பாணம் - கொழும்பு விசேட தொடருந்து சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளதாக யாழ். புகையிரத நிலைய அதிபர் தி. பிரதீபன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "எதிர்வரும் நாளை (இன்று) முதல், கல்கிசையில் இருந்து யாழ்ப்பாணம் - காங்கேசன்துறைக்கு இரவு நகர் சேர் கடுகதி ரயில் ஒன்று சேவையில் ஈடுபட உள்ளது.

இது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கல்கிசையில் இரவு 10 மணிக்கு புறப்பட்டு அங்கிருந்து வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ஆகிய புகையிரத நிலையங்களில் நிறுத்தப்பட்டு அம்பலங்கொடை, பொல்காவலை, குருநாகல், அனுராதபுரம், வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தை 5.25க்கு வந்தடைந்து, அங்கிருந்து 5.30 க்கு புறப்பட்டு கோண்டாவில், சுன்னாகம் வழியாக காங்கேசன்துறையை சென்றடையும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் காங்கேசன்துறையில் இருந்து இரவு 10 மணிக்கு புறப்பட்டு சுன்னாகம், கோண்டாவில் ஊடாக 10.25க்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து 10.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு கிளிநொச்சி, வவுனியா, அநுராதபுரம், குருநாகல், கொழும்பு, கம்பஹா, மருதானையை சென்றடைந்து அங்கிருந்து பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளையை சென்றடையவுள்ளது.

ஒரு வழி கட்டணமாக நகர்சேர் கடுகதிக்குரிய கட்டணமாக 2,800 ரூபாய் அறவிடப்படவுள்ளது. இதற்கான முன்பதிவுகள் யாழ்ப்பாண புகையிரத நிலையத்திலும் ஏனைய முன்பதிவுகளை மேற்கொள்ளக்கூடிய புகையிரத நிலையங்களிலும் நீங்கள் மேற்கொள்ளலாம். இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என எதிர்பார்க்கின்றோம்." என்றார். (ஐ)

# யாழ். நகரில் விபத்து; 2 பெண்கள் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜுன் 17

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு பெண்களை மோதித் தள்ளிவிட்டு வாகனம் ஒன்று தப்பிச் சென்றுள்ளது. இதில், அந்தப் பெண்கள் இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் யாழ். நகரின் மார்ட்டின் வீதிக்கு அண்மையாக பிரதான வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

படுகாயங்களுக்கு இலக்கான இரு பெண்களும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மோதிய வாகனம் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில், அதன் இலக்கத் தகடுகளில் ஒன்று மோதிய மோட்டார் சைக்கிளில் சிக்கியுள்ளது.

சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# எரிவாயுவுக்காக காத்திருக்காதீர்

## லிட்ரோ நிறுவனம்

கொழும்பு, ஜுன் 17

வீட்டு சமையல் எரிவாயுவைப் பெற வரிசையில் காத்திருக்க வேண்டாம் என்று லிட்ரோ நிறுவனம் பொதுமக்களை கோரியுள்ளது.

செவ்வாய்க்கிழமை தரையிறக்கப்பட்ட எரிவாயு தகனசாலை, மருத்துவமனை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே விநியோகிக்கப்படும்.

இந்தக் கையிருப்புக்கள் தீர்ந்த பின்னர் இதுவரை புதிய எரிவாயு கொள்வனவுக்கான உத்தரவு எதுவும் வழங்கப்படவில்லை என்றும் லிட்ரோ தெரிவித்துள்ளது.

இதனிடையே, அடுத்த எரிவாயு கப்பல் நாட்டை வந்தடைய குறைந்தது இன்னும் இரு வாரங்கள் ஆகுமென லிட்ரோ எரிவாயு நிறுவன தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)




# அதானி குழுமத்துக்கு எதிராக போராட்டம்!

கொழும்பு, ஜுன் 17

இந்தியாவின் அதானி குழுமத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் எதிரான உடன்படிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் தற்போது ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறுகின்றது.

பம்பலப்பிட்டி மெஜஸ்டிக்சிற்றியின் முன்பாக ஆரம்பமான ஆர்ப்பாட்டம் கொள்ளுப்பிட்டி வரை பேரணிப் போராட்டமாக இடம்பெற்றது.

இந்தியாவின் அதானி குழுமத்துடனான மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டத்தை கைவிடக் கோரி சுமார் 75 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# 21 குறித்து திருத்தங்களை முன்வைத்தது சம்பிக்க குழு

கொழும்பு, ஜுன் 17

21ஆவது திருத்தம் குறித்து சுயாதீனமாக செயல்பட ஆரம்பித்துள்ள பாராளுமன்ற உறுப்பினரான பட்டாலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு பல திருத்தங்களை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் அவர், நடத்திய செய்தியாளர் சந்திப்பில் சம்பிக்க ரணவக்க வெளியிட்ட தகவல்கள் வருமாறு,

பிரேரணை வரைவில் சில விடயங்கள் குறித்து சுயாதீனமாக இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.

அமைச்சரவையை நியமிக்கும்போது ஜனாதிபதி பிரதமருடன் ஆலோசிக்க வேண்டும், பாராளுமன்றத்தை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட கால அளவு இரண்டரை வருடங்களில் இருந்து 3 வருடங்களாக அதிகரிக்கப்பட வேண்டும். இந்தக் காலப்பகுதிக்கு முன்னதாக ஜனாதிபதியால் பாராளுமன்றை கலைக்க முடியாது.

அமைச்சரவையில் 30 அமைச்சர்கள், அரசமைப்பு பேரவையில் 6 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் 4 சிவில் சமூக உறுப்பினர்களும் இருக்க வேண்டும். 19ஆவது திருத்தத்தின் கீழ் அரசமைப்பு சபையின் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)



# வரிசையில் காத்திருந்த ஓட்டோ சாரதி மரணம்!

கொழும்பு, ஜூன் 17

எரிபொருளுக்காக காத்திருந்தவேளையில் ஓட்டோ சாரதி ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் பாணந்துறை வெகடை பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருந்த 55 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் பொருளாதார நெருக்கடியால் வரிசைகளில் காத்திருந்தே மக்கள் எரிபொருள், அத்தியாவசிய பொருட்களை பெறுகின்றனர். இவ்வாறு வரிசைகளில் காத்திருந்த சிலர் அண்மைக்காலத்தில் உயிரிழந்தமையும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

# ஏ- 9 நெடுஞ்சாலையை மறித்து கிளிநொச்சியில் போராட்டம்!

கிளிநொச்சி, ஜூன் 17

கிளிநொச்சியில் எரிபொருள் வழங்காத நிலையில் நேற்று வியாழக்கிழமை மாலை ஏ-9 வீதியை மறித்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்தில் எரிபொருளுக்காகக் காத்திருந்த மக்கள் எரிபொருள் வழங்கப்படாத நிலையில் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (ஐ)

# பொருளாதார நெருக்கடியை சமாளிக்க பாராளுமன்றில் விரைவில் வழிவரைபடம்!

### பிரதமர் ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கான முன்மொழிவுகள் அடங்கிய வழி வரைபடம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரத்ன, குமார வெல்கம, ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன், அமைச்சர்கள் மற்றும் அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் அதனை சமாளிப்பதற்கான அரசாங்கத்தின் குறுகிய மற்றும் நடுத்தர கால இலக்குகள் குறித்து உரையாற்றினார்.

நாட்டில் நிலவும் பொருளாதாரப் பேரழிவைக் குறைப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. (ஐ)




# யாழ்ப்பாணத்தில் நேற்று பெற்றோலுக்கு நீண்ட வரிசை!

யாழ்ப்பாணம், ஜூன் 17

**யாழ்ப்பாணத்தில் மக்கள் நேற்று, நீண்ட வரிசைகளில் பல மணி நேரமாக காத்திருந்து பெற்றோலை பெற்று சென்றமையை அவதானிக்க முடிந்தது.**

சாவகச்சேரி, சுன்னாகம், புலோலி மற்றும் பரமேஸ்வர சந்தி ஆகிய இடங்களில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் விநியோகிக்கப்படும் என பெற்றோலிய கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் புதன்கிழமை அறிவித்திருந்தது.

இதனை அடுத்து நேற்று அதிகாலை 4 மணி தொடக்கம் பெற்றோலை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசைகளில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருந்தனர்.

பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு கொழும்பில் நேற்று ஏற்றிய பெற்றோல் நேற்றுக் காலையே யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. அதன் பின்னரே விநியோக பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது , அனைவருக்கும் கிடைக்க பெற்ற பெற்றோலை பகிர்ந்தளிக்கும் முகமாக சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஆயிரம் ரூபாய்க்கே வழங்கப்பட்டது. இதனால் பல மணி நேர காத்திருப்பின் பின்னரும் 2.38 லீற்றர் பெற்றோலையே பெற முடிந்ததாக மக்கள் தெரிவித்தனர். (ஐ-3)

# தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்க்க விண்ணப்பம்!

கொழும்பு, ஜூன் 17

2023ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்று மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் வெளியிடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சால் இந்த விண்ணப்பப்படிவம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதி திகதி ஜூலை 16 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இந்திய உதவி திட்டத்தின் இறுதி டீசல் கப்பல் வந்தது!

கொழும்பு, ஜூன் 17

இந்திய கடன் திட்டத்தின் கீழ் கிடைக்கின்ற இறுதி டீசல் கப்பல் நேற்றுக் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந் துள்ளது.

40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலுடன் குறித்த கப்பல் வந்தடைந்துள்ளது.

நேற்று வந்தடைந்துள்ள கப்பலிலுள்ள டீசலை விநியோகம் செய்வதற்கு இன்னும் 3 நாட்கள் செல்லும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# நீதிமன்ற நடவடிக்கைகளையும் மட்டுப்படுத்துவதற்கு தீர்மானம்!

கொழும்பு, ஜூன் 17

குறைந்த பணியாளர்களுடன் நீதிமன்ற நடவடிக்கைகளை (திங்கள் முதல் வெள்ளி வரை) முன்னெடுக்குமாறு நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர், சகல நீதிமன்றங்களின் அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கான அறிவிப்பை நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எச்.சஞ்ஜீவ சோமரத்ன நேற்று விடுத்துள்ளார்.

கோவிட் தொற்றுநோயினால் 2020 மார்ச் முதல் 2022 வருடம் ஆரம்பம் வரையிலும், நீதிமன்ற நடவடிக்கைகளை சாதாரண முறைமையின் கீழ் முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது.

இதனால், பெரும் எண்ணிக்கையிலான வழக்குகளும் ஒத்திவைக்கப்பட்டன. இவ்வாறான வழக்குகளை அழைப்பதற்கான திகதிகள், உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாக வைத்தே, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளாந்த செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில், அத்தியாவசியத்தை கவனத்தில் கொண்டு ஆகக் குறைந்த அதிகாரிகளை மட்டுமே சேவைக்கு அழைக்கும் வகையில் முறையான வேலைத் திட்டமொன்றை தயாரித்து, கிழமை நாட்களில் மட்டுமே நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மகனை ஆற்றில் தள்ளிய தாய்க்கு விளக்க மறியல்!

கொழும்பு, ஜூன் 17

வத்தளை -ஹெந்தல - கதிரான பாலத்துக்கு அருகில் களனி ஆற்றில் தனது ஐந்து வயது மகனை வீசிவிட்டு, ஆற்றில் குதித்து உயிர் துறக்க முயன்ற பெண்ணை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரை நேற்று நீதிமன்றில் முற்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வத்தளை -ஹெந்தல - கதிரான பாலத்துக்கு அருகில் களனி ஆற்றில் தனது ஐந்து வயது மகனை தள்ளிவிட்டு, ஆற்றில் குதித்து உயிரை துறக்க முயன்ற குறித்த பெண் வத்தளை பொலிஸார் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தப் பெண் நேற்றுமுன்தினம் இரவு 7.30 அளவில் தனது மகனை தள்ளிவிட்டு, ஆற்றில் குதிக்க முற்பட்ட போது, வீதியால் பயணித்த நபரொருவர் அவரை தடுத்து நிறுத்தியுள்ளார்.

இதனையடுத்து, அவர் ஹெந்தலை பொலிஸ் காவலரணில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் வத்தளை பொலிஸாரால் கைதுசெய்து அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இந்நிலையில், ஆற்றில் தள்ளிவிடப்பட்ட சிறுவனை கண்டுபிடிக்க படகுகள் மூலம் கடற்படையினர் மற்றும் பொலிஸார் தேடுதல் பணிகளை முன்னெடுத்த போதும் அவர் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குழப்ப நிலைமை ஏற்பட்டால் எரிபொருள் வழங்க முடியாது!

கொழும்பு, ஜூன் 17

**எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்து நிற்கும் நிலையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நபர்களுக்கு மாத்திரமே எரிபொருளை வழங்க முடியும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.**

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு லோட் எரிபொருள் என்பது 6,600 லீற்றர்களாகும். முன்னர் அறிவிக்கப்பட்ட எரிபொருள் விநியோக கட்டுப்பாட்டுக்கு அமைய ஒரு லோட் மூலம் 220 வாகனங்களுக்கு மாத்திரமே எரிபொருளை பெற்றுக் கொடுக்க முடியும். எனினும் 2 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் வரிசையில் நிற்கின்றன.



"தயவுசெய்து இது தொடர்பில் அறிந்து கொள்ளுங்கள். எரிபொருள் பவுசர்களை ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு மீண்டும் மீண்டும் அனுப்ப முடியாது." எனவே அடுத்த திட்டமிடப்பட்ட திகதியில்தான் குறித்த எரிபொருள் நிலையத்துக்கு எரிபொருளை அனுப்ப முடியும்.

எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் குழப்ப நிலை ஏதும் ஏற்பட்டால், அன்றைய தினத்தில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருளை பெற்றுக் கொடுக்க முடியாது போகும். வருத்தத்துடன் அதனை இங்கு கூற வேண்டியுள்ளது. (ஐ)



## எரிபொருளுக்காக காத்திருந்தோருக்கு குளிர்பானம் வழங்கிய நிரப்பு நிலையம்!

வவுனியா, ஜூன் 17

வவுனியா மன்னார் வீதி சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த மூன்று நாட்களுக்கும் மேலாக எரிபொருள் எதுவும் வராத நிலையில் பொதுமக்கள் தமது வாகனங்களுடன் வரிசையில் நேற்றும் காத்திருந்தனர்.

இந்நிலையில், எரிபொருளுக்காக காத்திருந்தவர்களுக்கு குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் குளிர்பானங்களை வழங்கினர்.

இந்தச் செயலால் அங்கிருந்தவர்கள் அதனை மகிழ்ச்சியடைந்ததுடன், பலரும் பாராட்டும் தெரிவித்தனர். (ஐ)

## தீ விபத்தால் கடை நாசம்!

தலவாக்கலை, ஜூன் 17

தலவாக்கலை நகரில் பழங்கள் மற்றும் மரக்கறி விற்பனை செய்து வந்த கடை ஒன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் கடை முற்றாக எரிந்து சாம்பலானது என்று தலவாக்கலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்து நேற்று இரவு 10 மணியளவில் ஏற்பட்டுள்ளது எனப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

தலவாக்கலை பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் ஒரு மணித்தியாலத்துக்குப் பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. குறித்த கடையின் உரிமையாளர் மற்றும் அவரின் உதவியாளர் கடையில் இல்லாதபோதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீயால் மரக்கறி மற்றும் பழங்கள் முற்றாகத் தீக்கிரையாகியுள்ளன. எனினும், தீ விபத்தால் ஏற்பட்ட சேத விபரங்கள் இதுவரை கணிக்கப்படவில்லை.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் தலவாக்கலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)




## புல்மோட்டை மக்களுக்கு உலருணவுப் பொதிகள்!

திருகோணமலை, ஜூன் 17

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு, சிங்கப்பூரை சேர்ந்த நிறுவனம் ஒன்று இராணுவம் ஊடாக நாடு பூராகவும் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வருகின்றது.

அதற்கமைய புல்மோட்டை பகுதியில் உள்ள வறிய குடும்பங்கள், விதவைகளுக்கு வழங்கும் உலர் உணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஜூம்ஆ பள்ளிவாசலில் அந்தப் பிரதேசத்துக்கான இராணுவ கட்டளையிடும் அதிகாரி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ. முபாறக், புல்மோட்டை அனைத்து பள்ளிவாசல் தலைவர் ஜனாப் மஹ்மூத் மௌலவி ஆகியோர் கலந்து கொண்டு குறித்த பயனாளிகள் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர். (ஐ)



## தோணியில் மீன்பிடிக்க சென்றவர் சடலமாக மீட்பு

ஏறாவூர், ஜூன் 17

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள குடியிருப்பு ஆற்றில் தோணி ஒன்றில் மீன்பிடிக்க சென்ற ஒருவர் நீரில் மூழ்கிய நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டாரென ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் மயிலம்பாவெளி துரைச்சாமி வீதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான சின்னத்துரை சிறீதரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த மீனவர் வழமை போல சம்பவதினமான நேற்று புதன்கிழமை 4 மணிக்கு வீட்டில் இருந்து வெளியேறி மீன்பிடிப்பதற்காக குறித்த ஆற்றில் தோணியில் தனியாக சென்றவர் இரவாகியும் வீடு திரும்பாததை அடுத்து, உறவினர்கள் அவரை தேடிய நிலையில் நேற்று காலையில் ஆற்று நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

உயிரிழந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறா வூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

### ஆட்சி மாற்றம் அவசியம்:

## த. தே. கூட்டமைப்பின் கருத்துக்கு எதிர்க்கட்சி தலைவர் வரவேற்பு!

கொழும்பு, ஜூன் 17

"நாட்டில் ஆட்சி மாற்றத்தைக் கோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் கருத்தை வரவேற்கின்றோம். இந்த ஆட்சி மாற்றம் மக்கள் ஆணையுடன் ஜனநாயக வழியில் இடம்பெற வேண்டும். அதற்காக ஜனாதிபதித் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் விரைந்து நடத்தப்பட வேண்டும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"இலங்கையின் தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண வேண்டுமெனில் ஆட்சி மாற்றம் கட்டாயம் வேண்டும் என்று வலியுறுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கருத்தை நாம் வரவேற்கின்றோம். எமது கட்சியினதும் நிலைப்பாடும் இதுவாகவே உள்ளது.

தற்போதைய ஆட்சியில் சூதாட்ட அரசியல் சூடுபிடித்துள்ளது. இது நாட்டுக்குக் கேவலமானது. அதேவேளை, இந்த ஆட்சியால் நாள்தோறும் வீதிகளில் வரிசைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அனைத்துப் பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொருட்களின் விலையும் நாள்தோறும் சடுதியாக உயர்வடைந்து வருகின்றது. மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆட்சி மாற்றம் நிகழ்ந்தால்தான் எமது நாடு மீண்டெழ சர்வதேசம் கைகொடுக்கும். இந்த அராஜக ஆட்சி தொடர்ந்தால் அதாள பாதாளத்தில் விழுந்து கிடக்கும் நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்த முடியாது. எனவே, ஆட்சி மாற்றம் உடன் அவசியம்.

ஆட்சி மாற்றம் மக்கள் ஆணையுடன் ஜனநாயக வழியில் இடம்பெற வேண்டும். அதற்காக ஜனாதிபதித் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் விரைந்து நடத்தப்பட வேண்டும்" - என்றார். (ஐ)

## எரிபொருளை வாங்குவதற்கு இரு நிறுவனங்கள் தெரிவு!

கொழும்பு, ஜூன் 17

இலங்கை எரிபொருளை பெற்றுக்கொள்ள புதிய இரண்டு சர்வதேச நிறுவனங்கள் தெரிவு செய்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், விமானங்களுக்கான ஜெட் எரிபொருள் விநியோகிக்க மற்றுமொரு தனியார் நிறுவனமும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கும்போது, இதுவரை எரிபொருள் நிறுவனங்களுக்கு 735 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்த வேண்டியுள்ளது. மேலும், இந்தியாவிடமிருந்து 500 மில்லியன் டொலர் பெற்றுக்கொள்வது தொடர்பில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மீண்டும் நாட்டுக்கு எரிபொருள் கிடைக்கும் திகதி தொடர்பில் தற்போது சரியாக குறிப்பிட முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# அதிமுகவில் வெடித்துள்ள புதிய பிரச்னை:

## பழனிசாமியா? பன்னீர்செல்வமா?

தமிழகத்தின்பிரதான எதிர்க் கட்சியான அதிமுகவில் ஒற்றைத் தலைமை விவகாரம் பெரிதாக வெடித்துள்ளதால், திட்டமிட்டபடி பொதுக்குழு நடக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. தலைமை பதவியை பிடிக்க, பன்னீர்செல்வம் - பழனிசாமி இடையே தொடங்கியுள்ள குஸ்தி, “போஸ்டர்” யுத்தம், சாலை மறியல் அளவுக்கு தீவிரமடைந்து உள்ளது. இதற்கிடையில், இரு தரப்புக்கும் இடையில் சுமுக உடன்பாடு காணும் முயற்சி தோல்வி அடைந்தால், பொதுக்குழு கூட்டத்திற்கு தடை விதிக்கக் கோரி வழக்கு தொடர முடிவு செய்யப்பட்டு உள்ளது.

சென்னையில் கடந்த திங்களன்று நடந்த, அ.தி.மு.க., மாவட்டச் செயலர்கள் மற்றும் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில், அ.தி.மு.க.,வை பழனிசாமி கட்டுப்பாட்டில் கொண்டு வர, ஒற்றைத் தலைமை வேண்டும் என்ற கோரிக்கையை, அவரது ஆதரவாளர்கள் வலியுறுத்தினர்.

இந்த விவகாரம் தற்போது, கட்சியில் விஸ்வரூபம் எடுத்துள்ளது. வரும் 23ல் கூடவுள்ள பொதுக் குழுவுக்கு முன், பழனிசாமியை முன்னிலைப்படுத்த, அவரது ஆதரவாளர்கள் திட்டமிட்டு, இந்த கோஷத்தை கிளப்பி உள்ளனர். அதற்கு போட்டியாக, “இதுவரை விட்டுக் கொடுத்தது போதும் இம்முறை விட்டுக்கொடுக்கக் கூடாது” என, பன்னீர்செல்வம் ஆதரவாளர்களும் வரிந்து கட்டத் தொடங்கி உள்ளனர்.

சென்னையில் நேற்றுமுன்தினம் பன்னீர்செல்வம் வீட்டில் ஆதரவாளர்கள் கூட்டம் நடந்தது. முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம், முன்னாள் எம்.எல்.ஏ., மனோஜ் பாண்டியன், மாவட்ட செயலர்கள் சையத்கான், அசோக், கணேஷ் ராஜா, எம்.பி., தர்மர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அதே நேரத்தில், பழனிசாமியும் தன் ஆதரவாளர்களுடன் தனியாக ஆலோசனை நடத்தினார். முன்னாள் அமைச்சர்கள் தங்கமணி, வேலுமணி, சீனிவாசன், எம்.ஆர்.விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஆலோசனை முடிந்து புறப்பட்ட முன்னாள் அமைச்சர் சீனிவாசன், தன் ஆதரவு பழனிசாமிக்கு தான் என, திட்டவட்டமாக தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர்கள் விஸ்வநாதன், உதயகுமார் போன்றோர், இருவர் வீட்டிற்கும் சென்று வந்தனர். முன்னாள் அமைச்சர்கள் எம்.சி.சம்பத், காமராஜ் போன்றோர், பன்னீர்செல்வத்தை சந்தித்து பேசினர். பெரும்பாலான நிர்வாகிகள், “இரு தரப்பும் பேசி ஒரு முடிவுக்கு வரட்டும்” என, எங்கும் செல்லாமல் அமைதி காத்து வருகின்றனர்.

இரு தரப்பிலும் சமாதானம் ஏற்படுத்தவும், சிலர் முயற்சித்து வருகின்றனர். இது குறித்து, முன்னாள் அமைச்சர் உதயகுமார் கூறுகையில், “மூத்த தலைவர்கள் விவாதித்து வருகின்றனர். சுமுக முடிவு எடுப்பர்,“ என்றார். முன்னாள் அமைச்சர் தளவாய்சுந்தரம் கூறுகையில், “சுமுக நிலை ஏற்படுத்த அனைவரும் முயற்சித்து வருகிறோம். இதில், வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது,” என்றார்.

நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: முன்னாள் அமைச்சர் உதயகுமார் பன்னீர்செல்வம் வீட்டுக்குச் சென்று, அவரை விட்டு கொடுக்கும்படி வலியுறுத்த முயற்சித்தார். பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள், அவரை வார்த்தைகளால் வறுத்தெடுத்துள்ளனர். “எத்தனை முறை தான் பன்னீர்செல்வம் விட்டுக் கொடுக்க வேண்டும்?“ என, சரமாரியாக கேள்வி எழுப்பி உள்ளனர். அதனால், அவர் பதில் கூறாமல் சென்று விட்டார்.




இம்முறை விட்டுக் கொடுப்பதில்லை என்பதில், பன்னீர்செல்வம் உறுதியாக உள்ளார். பழனிசாமி தரப்பிடம் சிலர், “இப்போது இப்பிரச்னை வேண்டாம் பின்னர் பார்த்துக் கொள்வோம். தற்போதைக்கு ஒற்றைத் தலைமை யார் என்று முடிவு செய்யவில்லை எனக் கூறி, பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்“ என வலியுறுத்தி உள்ளனர். அதை, பழனிசாமி தரப்பு ஏற்கவில்லை.

இம்முறை விட்டுக் கொடுப்பதில்லை என்பதில், பன்னீர் செல்வம் உறுதியாக உள்ளார். பழனிசாமி தரப்பிடம் சிலர், “இப் போது இப்பிரச்னை வேண்டாம் பின்னர் பார்த்துக் கொள்வோம். தற்போதைக்கு ஒற்றைத் தலைமை யார் என்று முடிவு செய்யவில்லை எனக் கூறி, பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்“ என வலியுறுத்தி உள்ளனர். அதை, பழனிசாமி தரப்பு ஏற்கவில்லை.

பழனிசாமி தரப்பு விடாப்பிடியாக இருப்பதால், உள்கட்சி தேர்தல் முறையாக நடத்தப்படாதது குறித்த ஆதாரங்களுடன், பொதுக் குழுவுக்கு நீதிமன்றத்தில் தடை வாங்க, பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் ஆலோசித்து வருகின்றனர்.

இரு தரப்பிலும் பேசி சுமுக தீர்வு காணப்பட்டால், வரும் 23ம் திகதி திட்டமிட்டபடி பொதுக்குழு கூட்டம் நடக்கும். இல்லையெனில், பொதுக்குழு தள்ளிப் போகவோ, பிரச்னை பெரிதாகவோ வாய்ப்பு அதிகம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## ஒற்றைத்தலைமைக்காக போர்க்கொடி!

இதற்கிடையில், ஒற்றைத் தலைமை விவகாரத்தில், பன்னீர்செல்வம் மற்றும் பழனிசாமி ஆதரவாளர்கள் இடையே, மாநிலம் முழுதும், “போஸ்டர்” யுத்தம் நடந்து வருகிறது. “கட்சிக்கு தலைமையேற்க வர வேண்டும்” என பன்னீர்செல்வத்துக்கு அழைப்பு விடுத்து, அவரது ஆதரவாளர்கள் போஸ்டர் ஒட்டியுள்ளனர். பழனிசாமி ஆதரவாளர்களும் போஸ்டர் ஒட்டிஉள்ளனர். சென்னையில் வழக்கறிஞர் பிரிவு நிர்வாகிகள், “ஜெயலலிதாவால் அடையாளம் காட்டப்பட்ட நிகழ்கால பரதனே... வழிநடத்த வாருங்கள்!” என பன்னீர் செல்வத்துக்கு அழைப்பு விடுத்து, போஸ்டர்கள் ஒட்டி உள்ளனர்.




“அன்று தர்ம யுத்தம் இல்லையெனில், இன்று ஆட்சியும், கட்சியும் இல்லை. தாயின் தலைமகனே... தலைமையேற்க வா!” என, ராமநாதபுரம் மாவட்டத்தில், பன்னீர்செல்வத்துக்கு ஆதரவாக, போஸ்டர் ஒட்டப்பட்டுள்ளது.

தேனி, விருதுநகர் மாவட்டங்களிலும், பன்னீர்செல்வத்துக்கு ஆதரவாக போஸ்டர்கள் ஒட்டப பட்டுள்ளன. அதற்குப் போட்டியாக, பழனிசாமிக்கு ஆதரவாக, மாநிலம் முழுதும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. “ஒன்றரை கோடி தொண்டர்களின் ஒட்டுமொத்த விருப்பம் எடப்பாடியார்“ என்று அவர்கள் கூறியுள்ளனர். இருவருடைய ஆதரவாளர்களும் போஸ்டர் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பது, கட்சி நிர்வாகிகளிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சில இடங்களில், பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் ஒட்டிய போஸ்டர்களை, பழனிசாமி ஆட்கள் கிழித்துள்ளனர். இதைக் கண்டித்து, சென்னை, கிரீன்வேஸ் சாலையில், பன்னீர்செல்வம் வீட்டின் முன் குவிந்திருந்த அவரது ஆதரவாளர்கள், பகல் 1:00 மணியளவில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால், அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## கிரீன்வேஸ் சாலை மீண்டும் “பிசி!”

“சென்னை கிரீன்வேஸ் சாலை மீண்டும் பரபரப்பாகி உள்ளது. அ.தி.மு.க., ஆட்சியில், சசிகலாவுக்கு எதிராக பன்னீர்செல்வம் தர்மயுத்தம் துவங்கியபோது, அவர் தங்கியிருந்த கிரீன்வேஸ் சாலையில் உள்ள அரசு பங்களாவில், தினமும் நிர்வாகிகள் சந்திப்பு, ஆலோசனை என பரபரப்பு நிலவியது.

அதேபோல், சசிகலா ஆதரவு அணியில் இருந்த பழனிசாமி வீட்டிலும் ஆலோசனை நடந்தது. அதேபோன்ற நிலை தற்போது மீண்டும் துவங்கி உள்ளது. பழனிசாமி, தான் முதல்வராக இருந்தபோது வசித்த வீட்டிலேயே, தற்போதும் வசித்து வருகிறார்.

பன்னீர்செல்வம், அதே சாலையில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் வசித்து வருகிறார். கட்சியில் ஒற்றைத் தலைமை விவகாரம் சூடு பிடித்துள்ள நிலையில், மீண்டும் கிரீன்வேஸ் சாலை பரபரப்பாகி உள்ளது.

# மண்டபம் அகதிமுகாமில் நடப்பது என்ன?

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் இலங்கை அகதிகள் முகாமில் வசிக்கும் இளம் பெண்களை கவர்ந்து நடைபெறும் மதமாற்ற திருமணங்கள் ‘லவ் ஜிஹாத்தை’ நோக்கி நகருவதாக, தமிழக காவல் துறையின் உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழகத்தில் தற்போதுள்ள 108 இலங்கை அகதிகள் முகாமில் சுமார் 58,843 பேர் உள்ளனர். அதேபோல 34,135 அகதிகள், முகாமில் இல்லாமல் வெளியில் வசித்து வருகின்றனர். இது தவிர்த்து 54 இலங்கை அகதிகள் ஒடிஸாவில் வசித்து வருகின்றனர். தமிழகத்தில் மட்டும் 92,978 இலங்கை அகதிகள் வசிப்பது குறிப்பிடத்தக்கது.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் 450 குடும்பங்கள் வசிக்கின்றன. இதில் 450 ஆண்கள், 740 பெண்கள், 229 குழந்தைகள் என மொத்தம் 1,419 பேர் வசிக்கின்றனர். அண்மைக்காலமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக புதிதாக 28 ஆண்கள், 27 பெண்கள், 28 குழந்தைகள் என மொத்தம் 83 பேர் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இன மோதலுக்குப் பின்...

சுதந்திரத்துக்கு முன்பு ஆங்கிலேயர் முகாமாக, மண்டபம் இலங்கை அகதிகள் இருந்தது. கடந்த 1983-ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட சிங்கள-தமிழர்கள் இன மோதல், உள்நாட்டு போருக்கு பின்னர் ஈழ தமிழர்கள் கடல் வழியாக அடைக்கலம் தேடி இந்தியா நோக்கி வரத் தொடங்கினர். அப்போது, மண்டபம் முகாம், அகதிகள் இடைத்தங்கல் முகாமாக மாற்றப்பட்டது.

இலங்கையில் இருந்து வரும் அகதிகள், முதலில் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டு அவர்கள் உண்மையான அகதிகள் தானா என்பதை உறுதி செய்த பின்னர், தமிழகத்தின் பிற பகுதிகளில் உள்ள தற்காலிக முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்ள் தடுப்பு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இலங்கையில் இருந்து அகதிகள் வருகை முற்றிலும் குறைந்த பின்னர் மண்டபம் இடைத்தங்கல் முகாம், தற்காலிக அகதிகள் முகாமாக மாற்றப்பட்டது.

இலங்கையில் உள்நாட்டு போர் முடிவுக்கு வந்த பின்னர், தமிழகத்தில் அகதிகள் முகாம் மீதான கண்காணிப்பை காவல் துறை குறைத்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. இது தற்போது பல்வேறு பக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இதில் ஏற்பட்ட ஒரு விளைவே, தமிழக காவல் துறையை இப்போது அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இது தொடர்பாக தமிழக காவல்துறையின் உள்நாட்டு பாதுகாப்புப் பிரிவு ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:



## தமிழக உளவுத்துறை வெளியிட்ட எச்சரிக்கை!

இலங்கை அகதிகள் முகாமில் வசிக்கும் இளம் பெண்களை கவர்ந்து நடைபெறும் மதமாற்ற திருமணங்கள் ‘லவ் ஜிஹாத்தை’ நோக்கி நகருவதாக, தமிழக காவல் துறையின் உளவுத் துறை எச்சரிக்கை

**காதல் திருமணங்கள்:**

மண்டபம் அகதிகள் முகாமில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த தமிழ் இந்துப் பெண்களை முஸ்லிம் இளைஞர்கள் கவர்ந்து திருமணம் செய்து கொண்டு மதம் மாற்றுவது அதிகரித்து வருகிறது. இதில் மண்டபம் அகதிகள் முகாமில் இருந்த 27 வயது இலங்கை தமிழ் இந்து பெண், மண்டபம் மேற்கு தெருவைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் இளைஞரை கடந்த பெப்ரவரி மாதம் 4-ஆம் திகதி திருமணம் செய்துள்ளார்.

தற்போது கணவருடன் முகாமுக்கு வெளியே வசிக்கும் இந்தப் பெண், மாதந்தோறும் அகதிகள் முகாமுக்கு வந்து தனது இருப்பைப் பதிவு செய்கிறார். மேலும் அகதிகளுக்கு வழங்கப்படும் அரசின் நிவாரண உதவிகளை அந்தப் பெண் குடும்பத்தினர் பெற்று வருகின்றனர்.

இதனால் அவரது பெயர் மண்டபம் முகாமில் அகதிகள் பதிவில் இருந்து நீக்கப்படவில்லை. ஆனால், மண்டபம் காவல் நிலையத்தில் அந்தப் பெண் காணவில்லை (Cr.no.23/2022) என வழக்குப்பதியப்பட்டுள்ளது.

இதேபோல மண்டபம் அகதிகள் முகாமில் வசித்து வந்த மற்றொரு இலங்கை இந்துப் பெண், அங்குள்ள பள்ளியில் பிளஸ் 2 படித்து வருகிறார். அந்தப் பெண், அண்மையில் திடீரென காணாமல்போனார். அந்தப் பெண்ணும், மண்டபம் பகுதியைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் இளைஞரும் இரண்டு ஆண்டுகளாகக் காதலித்து வந்ததாகவும், அந்த இளைஞருடன் அந்தப் பெண் சென்று இருக்கலாம் எனவும் அவரது குடும்பத்தினர் சந்தேகின்றனர்.

இது தொடர்பாக மண்டபம் காவல் நிலையத்தில், அந்தப் பெண்ணைக் காணவில்லை என (Cr.no.103/2022) வழக்குப் பதியப்பட்டுள்ளது.

மேலும், மண்டபம் முகாமில் உள்ள இந்துப் பெண்களைக் குறிவைத்து உள்ளூர் முஸ்லிம் இளைஞர்கள் செயல்படும் இந்தப் போக்கு அதிகரித்து வருவது ‘லவ் ஜிஹாத்’ வடிவத்தைக் கொடுத்து, அப்பகுதியில் வகுப்புவாத பதற்றத்தை உருவாக்கக் கூடும். அத்துடன் முஸ்லிம்களின் ஜிஹாதி பிரிவினர், இந்தப் பகுதியை தங்களது செயல்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதைத் தடுக்க முடியாது.




எனவே, இதுபோன்ற சம்பவங்கள் தமிழகத்தில் உள்ள பிற இலங்கை அகதிகள் முகாமில் நிகழ்கின்றனவா எனக் கண்காணிக்க வேண்டும். அகதிகள் முகாமில் வசிப்பவர்களிடம், இப்படிப்பட்ட சம்பவங்கள் குறித்து விழிப்புணர்வை அரசின் பிற துறையினரோடு இணைந்து ஏற்படுத்த வேண்டும். அனைத்து அகதிகள் முகாம்களிலும் இதுபோன்ற சம்பவங்கள் இனி நடைபெறாமல் இருப்பதற்குரிய தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ரகசிய விசாரணை:**

இந்த சுற்றறிக்கையின் காரணமாக தமிழகத்தில் உள்ள அனைத்து இலங்கை அகதிகள் முகாம்களிலும் மாநில உளவுத் துறையினர் ரகசிய விசாரணையை முடுக்கிவிட்டுள்ளனர். அவர்கள், முகாமுக்கு அடிக்கடி வந்து செல்லும் நபர்கள், முகாமில் வசிக்கும் நபர்களோடு நெருங்கிய தொடர்பில் இருக்கும் வெளி நபர்கள் ஆகியோர் குறித்த தகவல்களைச் சேகரிக்கின்றனர்.

அதேபோல முகாமை விட்டு வெளியே தங்கியிருந்து வேலை செய்யும் அகதிகளையும், அவர்களது தினசரி நடவடிக்கைகளையும், அகதிகளுடன் தொடர்பில் இருக்கும் நபர்கள் குறித்த தகவல்களையும் திரட்டி வருகின்றனர்.

ஏனெனில், இதில் சந்தேகத்துக்குரிய நபர்களை மட்டும் தங்களது கண்காணிப்பில் வைத்துக் கொள்வதற்கு உளவுத் துறை திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. இந்த நடவடிக்கையின் மூலம் மண்டபம் அகதிகள் முகாமில் ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையைப் போன்று பிற முகாம்களில் ஏற்படுவதைத் தடுக்க முடியும் என உளவுத்துறையினர் நம்புகின்றனர்.

**‘லவ் ஜிஹாத்’ என்றால் என்ன?**

முஸ்லிம்கள் அல்லாத இளம் பெண்களை இஸ்லாமிய மதத்திற்கு மதமாற்றம் செய்யும் நோக்கோடு, முஸ்லிம் இளைஞர்கள் போலியாக காதல் செய்து திருமணம் செய்துகொள்வதே ‘லவ் ஜிஹாத்’ என்று அழைக்கப்படுகிறது.

இதில் லவ் ஜிஹாத் முறையில் பிற மதப் பெண்களை காதலித்து திருமணம் செய்யும் இளைஞர்கள், பின்னர் அவர்களை சமூக விரோதச் செயல்களுக்குப் பயன்படுத்துவதாகவும் புகார்கள் உள்ளன.

பாரதிய ஜனதா கட்சி ஆளும் உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், ஹரியாணா, கர்நாடகம் மற்றும் அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் லவ் ஜிஹாத்தை தடுக்க சிறப்புச் சட்டங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அண்டை மாநிலமான கேரளத்தில் லவ் ஜிஹாத் காதல் திருமணங்கள் அதிகமாக நடைபெறுவதாக புகார் கூறப்படுகிறது. ஆனால், கேரள மாநிலத்தை ஆளும் மார்க்சிஸ்ட் கட்சியோ அது தவறான பிரசாரம் எனக் கூறி வருகிறது.

- தினமணி



> மண்டபம் அகதிகள் முகாமில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த தமிழ் இந்துப் பெண்களை முஸ்லிம் இளைஞர்கள் கவர்ந்து திருமணம் செய்து கொண்டு மதம் மாற்றுவது அதிகரித்து வருகிறது. இதில் மண்டபம் அகதிகள் முகாமில் இருந்த 27 வயது இலங்கை தமிழ் இந்து பெண், மண்டபம் மேற்கு தெருவைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் இளைஞரை கடந்த பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி திருமணம் செய்துள்ளார்.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல் **(30 புள்ளிகள்)**

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |
| 60. | பொருத்தமான வாக்கியங்கள் | | | | |

**கல்வி tv CHANNEL-1**

**17.06.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

**கல்வி tv CHANNEL - 2**

**17.06.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பொருளாதார நெருக்கடியால் இடமாற்றத்தை இரத்துசெய்க!

## 55 ஆசிரியர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மனு

கல்முனை, ஜூன் 17

கல்முனை வலயத்தில் இருந்து அண்மையில் இடமாற்றக் கடிதங்களை பெற்ற 55 ஆசிரியர்கள் "இன்றைய பொருளாதார நெருக்கடி மிகுந்த சூழலில் எங்கள இடமாற்றம் செய்ய வேண்டாம்", என்று கூறி அந்த இட மாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மனுவைக் கையளித்துள்ளனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ. சி. அப்துல் அசிஸிடம் குறித்த ஆசிரியர்கள் அந்த மனுவைக் கையளித்துள்ளனர்.

இதுதொடர்பாக இணைப்பாளர் அப்துல் அஸீஸ், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இது தொடர்பாக அறிவித்தார் .

பதிலுக்கு ,"நாங்கள் முறைப்படி விண்ணப்பம் கோரி இந்த இடமாற்றத்தை செய்து இருக்கிறோம். பொருத்தமில்லாதவர்கள் மேன்முறையீடு செய்தால் அதனை கவனிக்கிறோம். மேலும், மாகாண கல்விச் செயலாளருடன் கலந்துரையாடி பின்னர் எதையும் கூற முடியும் "என்று அஸீஸிடம் பதிலளித்திருக்கிறார்.

குறித்த 55 ஆசிரியர்களும் கையளித்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

கிழக்கு மாகாணத்தில் இன்றைய மோசமான கால கட்டத்தில் எந்த ஒரு வலயத்திலும் இவ்வாறான மனிதாபிமானம் அற்ற இடமாற்றம் இடம்பெறவில்லை. ஆனால், கல்முனை வலயத்தில் மாத்திரமே 98 பேர் ஆசிரியர் இடமாற்றத்திற்கு குறிப்பிடப்பட்டிருந்தது. இறுதியில் 55 பேர் மாத்திரமே இந்த இடமாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள், பொருளாதார நெருக்கடி போன்ற பிரச்னைகள் நிலவும் கால கட்டத்தில் எங்களை 40 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்ய இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இன்றைய சூழலில் அவ்வளவு தூரம் பயணம் செய்து எம்மால் திருப்தியான கற்பித்தலை செய்ய முடியாது. குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்ட பெண் ஆசிரியர்களும் இந்த 40 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூரம் சென்று கற்பிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மனிதாபிமானம் கருதி இந்த இடமாற்றத்தை இரத்து செய்யுமாறு கோருகின்றோம். என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது நிருபர், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ள நாயகம் அவர்களோடு தொடர்பு கொண்டு கேட்ட போது.,

கல்முனை வலயத்தில் ஆசிரியர்கள் அளவுக்கு அதிகமாக இருக்கின்றார்கள். இதனை சமநிலைப்படுத்தும் நோக்கில் எனக்கு கல்விச் செயலாளர் பணிப்புரை விடுத்தார். அதற்கமைய இந்த இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கின்றது . வெளி வலயம் சேவை செய்யாத ஆசிரியர்கள் நீண்டகாலம் ஒரு பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர்கள் அவர்களை இனங்கண்டு 55 பேரை இடம் மாற்றுவதற்கு நாங்கள் இடமாற்ற கடிதங்களை குறித்த ஆசிரியர்களுக்கு அனுப்பியிருந்தோம். அதில் பலர் மேல்முறையீடு செய்தார்கள். அவ்வாறு மேன்முறையீடு செய்தவர்களில் 38 ஆசிரியர்களை அவர்களது மேன்முறையீட்டை ஏற்று, அவர்களது விருப்பிற்கு இணங்க வலயத்துக்கு வெளியே அருகில் உள்ள பாடசாலைகளுக்கு நியமித்திருந்தோம். அந்த 38 பேரும் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்கள். எனவே, எஞ்சிய தொகையை ஆசிரியர்களே இப்பொழுது இந்த இடமாற்றம் இரத்து செய்யுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதனையும் கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் உடன் கலந்துரையாடிய பின்னரே தெரிவிக்க முடியும் - என்றார். (ஐ)



## ஆலையடிவேம்பில் டீசலுக்காக நீளவரிசையில் மக்கள் காத்திருப்பு

ஆலையடிவேம்பு, ஜூன் 17

கிழக்கு மாகாணம் முழுவதும் எரிபொருளுக்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது. இந்நிலையில், அம்பாறை - ஆலையடிவேம்பு பல நோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் டீசலை பெற்றுக் கொள்வதற்காக உழவு இயந்திரங்கள் உள்ளிட்ட கனரக வாகன உரிமையாளர்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர்.

பலர் தங்கள் வாகனங்களுடன் இரவு வேளையிலும் குறித்த இடங்களில் தங்கியிருந்து டீசலை எதிர்பார்த்திருந்தனர். இந்த நிலையத்தினூடாக டீசல் வழங்கப்பட்டு ஒரு வாரத்தை கடந்துள்ள நிலையில் பெய்துவரும் மழைக்கு மத்தியிலும் ஒரு கிலோமீற்றருக்கும் அப்பால் நீண்ட வரிசையில் வாகன உரிமையாளர்கள் காத்திருந்தனர்.

இதேநேரம் பெற்றோல் வழங்கப்பட்டும் ஒரு வார காலம் கடந்த நிலையில் மக்கள் பெற்றோலுக்காவும் காத்திருந்ததுடன், அதிகமானவர்கள் சைக்கிள்களை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

எனினும், பெற்றோல் இன்றி அரச அலுவலர்களும் கடமைக்கு செல்வதை தவிர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காத்தான்குடியில் இரத்த தான முகாம்!

மட்டக்களப்பு, ஜூன் 17

குபா இளைஞர் கழகம் மற்றும் குபா விளையாட்டுக் கழகம் ஆகியவை இணைந்து 3ஆவது தடவையாக ஏற்பாடு செய்துள்ள மாபெரும் இரத்த தான முகாம் காத்தான்குடியில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு காத்தான்குடி - 5 ஜாமியுழ்ழாபிரீன் வித்தியாலயத்தில் இரத்த தான முகாம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வீடு புகுந்து பொருட்கள் திருட்டு 24 மணி நேரத்தில் மூவர் கைது!

சம்மாந்துறை, ஜூன் 17

வீடொன்றில் இருந்த பல இலட்சம் பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் பெறுமதிமிக்க பொருட்களை திருடிய மூவரை 24 மணி நேரத்தினுள் சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை - சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீடொன்றில் கடந்த 8 ஆம் திகதி உபகரணங்கள் பல களவாடப்பட்டன. வீட்டின் உரிமையாளர் தனிப்பட்ட தேவை நிமித்தம் கொழும்புக்கு சென்றிருந்த நிலையில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டு கடந்த புதன் கிழமை சம்மாந்துறை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.



உரிமையாளர் வழங்கிய தகவலுக்கமைய பொலிஸார் நடத்திய விசாரணையில் களவாடப்பட்ட பொருட்களுடன் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேக நபர்களில் 28 வயதானவர் பிரதான சந்தேக நபர் எனவும் ஏனைய இரு சந்தேக நபர்கள் களவாடப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கைதான மூன்று சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (ஐ)

## அதிக விலைக்கு அரிசி விற்பனை; 7 நிலையங்களுக்கு எதிராக வழக்கு!

மட்டக்களப்பு, ஜூன் 17

மட்டக்களப்பு நகரப் பகுதியில் நுகர்வோர் அதிகார சபையினர் அரிசி விற்பனை நிலையங்கள், அரிசி ஆலைகளில் நேற்று முன்தினம் சோதனையிட்டனர்.

இதன்போது, கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த இரு வர்த்தக நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை, 8 அரிசி விற்பனை நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட நுகர்வோர் அதிகார சபை பணிப்பாளர் ஆர். எவ். அன்வர் சதாத் தெரிவித்துள்ளார்.

அண்மைகாலமாக நுகர்வோர் அதிகார சபைக்கு தொடர்ச்சியாக வர்த்தக நிலையங்களில், கட்டுப்பாட்டு விலையை விட அதிகவிலைக்கு



விற்பனை செய்யப்படுவதாகவும், அரிசி பதுக்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடுகள் வழங்கப்பட்டன.

இதேபோல ஊறணியிலும் அரசி ஆலை ஒன்று உட்பட 4 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# உலக படத்திலிருந்து இரு ஆண்டில் உக்ரைன் காணாமல் போய்விடும்!

## ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி எச்சரிக்கை



மொஸ்கோ, ஜூன் 17

"உக்ரைன் இன்னும் இரண்டு ஆண்டுகளில் உலக வரைபடத்திலிருந்து இல்லாமல் போகலாம்" என்று ரஷ்ய முன்னாள் ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

நேட்டோ அமைப்புடன் இணைய முடிவு செய்ததால், உக்ரைன்மீது ரஷ்யா போர் தொடுத்தது. மாதக் கணக்கில் இந்தப் போர் தொடர்ந்து நடக்கிறது. போர் காரணமாக இலட்சக்கணக்கான மக்கள் போலந்து உள்ளிட்ட நாடுகளுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். உக்ரைன் - ரஷ்யா போர் காரணமாக உலகளவில் பெரும் பொருளாதார பின்னடைவும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், தற்போது உக்ரைனின் கிழக்குப் பகுதியில் உள்ள சீவிரோடோனெட்ஸ்க் மற்றும் கார்கீவ் ஆகிய பகுதிகளில் ரஷ்ய படைகள் ஏவுகணைத் தாக்குதலை நடத்தி வருகின்றன. இவற்றை தடுக்க உக்ரைன் ஆயுத உதவியை கோரி வருகிறது.

இதனிடையே, ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதியான டிமிட்ரி மெத்வதேவ், உக்ரைன் குறித்து கூறிய கருத்து சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது.

அவர், "உக்ரைன் தனது முதலாளிகளிடமிருந்து வரும் 2 ஆண்டுகளில் விநியோகக் கட்டணத்துடன் எல். என். ஜியைப் பெற விரும்புகிறது என்று ஓர் அறிக்கையைப் பார்த்தேன். உக்ரைனின் இந்தத் திட்டம் உடைந்துவிடும். முதலில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் உலக வரைபடத்தில் உக்ரைன் இருக்குமா? அமெரிக்கர்களுக்கு அதை பற்றி கவலையில்லை. அவர்கள் 'ரஷ்யா எதிர்ப்பு' திட்டத்தில் மிகவும் முதலீடு செய்கிறார்கள், மற்ற அனைத்தும் அவர்களுக்கு ஒன்றுமில்லை" என்றார். (ஐ)

# மேலும் 100 கோடி டொலர் ஆயுதங்கள் உக்ரைனுக்கு

## ஜனாதிபதி பைடன் உறுதி

வாஷிங்டன், ஜூன் 17

கப்பல் எதிர்ப்பு ஏவுகணை அமைப்புகள், ஆட்லறி ஏவுகணைகள், ஹோவிட்சர் வகை பீரங்கிகள் மற்றும் வெடிமருந்துகள் உள்ளிட்ட மேலும் 100 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்கவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் தொலைபேசியில் உரையாடிய பைடன், புதிய ஆயுத உதவிகளை வழங்கும் உறுதிமொழியை அளித்தார்.

இதனைவிட உக்ரைனில் உள்ள மக்களுக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் முக்கியமான மருந்துப் பொருட்கள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு, உணவு, தங்குமிடம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பணம் வழங்குதல் உள்ளிட்டவற்றுக்கான மனிதாபிமான உதவியாக 225 மில்லியன் டொலர்களை வழங்குவதாகவும் பைடன் அறிவித்தார்.

இதேவேளை, அமெரிக்காவின் இந்த புதிய உதவிகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வெளியுறவுத்துறை செயலாளர் அன்ரனி பிளிங்கனுடன் உக்ரேனிய வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா பேசினார் அமெரிக்காவின் முக்கியமான இராணுவ உதவிக்கு இதன்போது அவர் நன்றி தெரிவித்தார்.

மேலும், கனரக ஆயுதங்கள் அவசரமாக வழங்குமாறு இதன்போது கோரிக்கை விடுத்ததாகவும் டிமிட்ரோ குலேபா தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ளார். (ஐ)

# செல்வந்தரையும் விடாத எகிறும் செலவினங்கள்!

லண்டன், ஜூன் 17

உலக அளவில் கொரோனாவுக்கு பிறகு பெரிய நகரங்களில் செலவுகள் மிக அதிகமாக உயர்ந்து வருகிறது. இந்த நகரங்களில் சாதாரண மக்களை விடவும் செல்வந்தர்களுக்கு செலவு அதிகரித்துள்ளன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஜூலியஸ் பேர் குரூப் லிமிடெட் 2022 உலகளாவிய செல்வம் மற்றும் வாழ்க்கை முறை அடிப்படையில் உலகின் செலவு மிக்க நகரங்களை வரிசைப்படுத்தியுள்ளது.

இது வீடுகள், சொத்து, கார்கள், விமான கட்டணம், பாடசாலை மற்றும் பிற செலவுகளை பகுப்பாய்வு செய்து உலகின் மிக விலையுயர்ந்த நகரங்களை தரவரிசைப்படுத்துகிறது. இந்த பட்டியலின் விவரம்:

ஷங்காய்: ஷங்காய் மீண்டும் இந்த பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. சீனாவின் மிகப் பெரிய நகரமான இது, உலகின் பொருளாதார தலைநகரமாக கருதப்படுகிறது. பணக்காரர்கள் அதிகம் வாழும் ஒரு நகரமாகும். ஷாங்காயிலும் கூட சொகுசு பொருட்களின் விலை அதிகரிப்பு, பணவீக்கம் உயர்வு போன்ற காரணங்களால் மக்களின் வாங்கும் திறன் என்பது குறைந்துள்ளதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

லண்டன்: பிரிட்டன் தலைநகரமான லண்டன் உலகின் அதிக செலவு பிடிக்கும் நகரங்களில் இரண்டாவது இடத்தில் உள்ளது.


தைபே: தாய்வானின் தலைநகரமான தைபே மூன்றாவது இடத்தில் உள்ளது. தைவானின் பொருளாதார மையமாக உள்ள தைபே, கலாசார நகரமாகவும் உள்ளது.

ஹொங்கொங்: இந்த பட்டியலில் 4வது இடத்தில் உள்ள ஹொங்கொங், ஆசியாவின் முக்கிய நகரமாகும். பிரிட்டிஷ் காலனியாக இருந்த இந்த நகரத்தை முழுமையாக தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர சீனா தொடர்ந்து தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மக்களின் வாழ்க்கை தரம், வீட்டின் விலை, கார்கள், விமான போக்குவரத்து, பள்ளிகள் என அனைத்தும் இந்த நகரத்தில் அதிக செலவு மிக்கதாக உள்ளது.

சிங்கப்பூர்: உலகின் அதிக செலவு மிக்க நகரங்களில் 5ஆவது இடத்தை பிடித்துள்ள நகரம் சிங்கப்பூர். இங்கு உணவு பொருட்கள் விலை, வாடகை கட்டணம் என எல்லாம் அதிகம்.

அடுத்த இடங்களில், மொனாகோ, சுவிற்சர்லாந்தின் சூரிச், ஜப்பானின் ரோக்கியோ, அவுஸ்திரேலியாவின் சிட்னி, பிரான்ஸின் பாரிஸ் நகரங்கள் உள்ளன. (ஐ)

# 104 ஆண்டுகளில் அழிந்த ஆர்ட்டிக் பனிப் பிரதேசம்!



ஒஸ்லோ, ஜூன் 17

காலநிலை மாற்றத்தால் ஆர்ட்டிக் பிரதேசம் உருமாறியுள்ளதை விளக்கும் புகைப்படம் இணையத்தில் பிரபலமாகி வருகிறது.

காலநிலை மாற்ற பாதிப்பு முந்தைய காலங்களைக் காட்டிலும் தற்போது தீவிரமாக உணரப்பட்டு வருகிறது. காலநிலை மாற்றத்தால் புவி வெப்பநிலை உயருவதும் அதன்காரணமாக துருவப் பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் உருகி வருவதும் அதிகரித்து வருவதாக விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர். இந்நிலையில், 104 ஆண்டுகளுக்கு முன்பாக ஆர்ட்டிக் பிரதேசத்தில் உள்ள பனிப்பாறைகளை எடுத்த புகைப்படம் தற்போது இணையத்தில் பரவி வருகிறது.

1918ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட வடக்கு நோர்வேயின் ஸ்வால்பார்ட்டில் உள்ள பனிப்பாறைகளின் புகைப்படங்களைப் பகிர்ந்து புகைப்படக் கலைஞர் நெய்ல் ட்ரேக் அதே இடத்தில் 2022ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புகைப்படத்தை ஒப்பிட்டுள்ளார். மேலும், அவர் காலநிலை மாற்றத்தின் தீவிரத்தைப் புரிந்து கொண்டு அதற்கான உரையாடலை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ட்ரேக் பகிர்ந்துள்ள இந்தப் படத்தில் 104 வருடங்களுக்கு முன்பிருந்த பனிப்பாறையானது உருகி தற்போது அதன் பின் உள்ள மலைகள் தெரிவது காலநிலை மாற்றத்தின் தீவிரத்தை உணர்த்துவதாக காலநிலை மாற்ற விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆர்க்டிக் பிரதேசத்தில் உள்ள பனிப்பாறைகள் ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு 13 சதவிகித பனிப்பாறைகளை காலநிலை மாற்றத்தால் இழந்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஈரான் கடல் பரப்பில் 7 நில நடுக்கங்கள்!

தெஹ்ரான், ஜூன் 17

ஈரானின் தெற்கே அமைந்துள்ள கிஷ் தீவில் அடுத் தடுத்து 7 நிலநடுக்கங்கள் ஏற்பட்டதில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் உள்ளிட்ட பெர்சிய வளைகுடா பகுதிகள் குலுங்கின.

ஹார்மோஸ் ஜலசந்திக்கு அருகில் உள்ள தீவில் 6 ரிக்டர் என்ற அளவில் 4 அதிர்வுகளும், 5.3 ரிக்டர் புள்ளியில் ஒரு அதிர்வும் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கட்டாரிலும் ரிக்டர் அளவுகோலில் 5.3 புள்ளிகளாக நிலநடுக்கம் பதிவானது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் எதுவும் வெளியாகாத நிலையில், நில நடுக்கத்தின் அதிர்வுகள் நாடு முழுவதும் உணரப்பட்டிருக்கலாம் என கூறப்படு கிறது.

ஈரான் சராசரியாக ஒரு நாளைக்கு ஒரு நிலநடுக்கத்தை எதிர்நோக்குகிறது. 2003 ஆம் ஆண்டு 6.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதில் வரலாற்று நகரமான பாம் தரையிறங்கியதோடு, 26,000 பேர் உயிரிழந்தனர்.

2017 ஆம் ஆண்டு மேற்கு ஈரானில் ஏற்பட்ட 7 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தில் 600இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததோடு, 9,000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் ரஷ்ய வீரர்கள் பங்கேற்கலாம்!

வாஷிங்டன், ஜூன் 17

இந்த வருட அமெரிக்க ஓப்பன் போட்டியில் ரஷ்ய, பெலாரஸ் வீரர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2022 அமெரிக்க ஓப்பன் போட்டியில் தகுதியான அனைத்து வீரர்களும், அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனுமதிக்கப்படுவார்கள் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஜூன் இறுதியில் தொடங்கும் விம்பிள்டன் போட்டியில் ரஷ்ய, பெலாரஸ் வீரர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இந்நிலையில், அமெரிக்க ஓப்பன் போட்டி நிர்வாகத்திடமிருந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. உக்ரைன் மீது போரில் ஈடுபடும் ரஷ்யாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக விம்பிள்டன் நிர்வாகம் இந்த முடிவை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

2021 அமெரிக்க ஓப்பன் போட்டியின் இறுதிச் சுற்றில், பிரபல வீரர் ஜொகோவிச்சை வீழ்த்தி ரஷ்யாவின் டேனில் மெத்தேவ் பட்டம் வென்றார்.

மெத்தேவால் இந்த வருட விம்பிள்டன் போட்டியில் கலந்துகொள்ள முடியாது. எனினும், தற்போதைய அறிவிப்பால் அவர் அமெரிக்க ஓப்பனில் பங்கேற்க முடியும். (ஐ)

# டெஸ்ட் தரவரிசை; ரூட் முதலிடத்தில்!



டுபாய், ஜூன் 17

ஐ. சி. சி. டெஸ்ட் தரவரிசையில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

ஜோ ரூட் அண்மையில், 10 ஆயிரம் ஓட்டங்களை குவித்தார்.

லோர்ட்ஸில் நடந்த போட்டியில் 115 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்ற அவர், நாட்டிங்ஹாம் டெஸ்டில் 176 ஓட்டங்களை இதனால், அவர் 897 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றார்.

இதன்மூலம், முதலிடத்தில் இருந்த லபுசாக்னே இரண்டாமிடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இந்தப் பட்டியலில் இலங்கையின் டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளார். (ஐ)

# தேசிய அணியில் இடம்பிடிப்பு கலையரசிக்கு பாராட்டுவிழா!

கிளிநொச்சி, ஜூன் 17

19 வயதுக்கு உட்பட்டோருக்கான 30 பேர் கொண்ட தேசிய அணியில் தெரிவு செய்யப்பட்ட கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவி சதாசிவம் கலையரசியை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பாடசாலை சமூகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

கரடிப்போக்கு சந்தியிலிருந்து பாடசாலை அதிபர், மாணவிக்கு மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டு வாகனத்தில் பாண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்து செல்லப்பட்டு பாடசாலை மண்டபத்தில் மாணவி கௌரவிக்கப்பட்டார்.



இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கிளிநொச்சிதெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட செயலக உதவிப்பிரதேச செயலாளர், மாவட்ட துடுப்பாட்ட சங்க தலைவர், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், பயிற்றுவிப்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# அயர்லாந்துடனான ரி-20; இந்திய அணி அறிவிப்பு!



புதுடில்லி, ஜூன் 17

அயர்லாந்துடன் 2 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் மோதவிருக்கும் இந்திய அணி ஹார்திக் பாண்ட்யா தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்துடனான டெஸ்ட் ஆட்டத்தில் பங்கேற்பதால், இந்தியாவின் முக்கிய போட்டியாளர்கள் எவரும் இந்தத் தொடரில் இடம்பெறவில்லை.

எனவே, ஐ. பி. எல் போட்டியின் அறிமுக தொடரிலேயே குஜராத் ரைட்டன்ஸ/க்கு கோப்பை வென்று தந்த ஹார்திக் பாண்ட்யா, அயர்லாந்து தொடர் மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் தலைவராக புதிய அத்தியாயத்தை தொடங்குகிறார்.

இந்தத் தொடரில் ராகுல் திரிபாதிக்கு அறிமுக வாய்ப்பு அளிக்கப்படுவதுடன், சஞ்சு சாம்சன், சூர்ய குமார் யாதவுக்கு மீண்டும் அணியில் இடம் கிடைத்துள்ளது.

**அணி விவரம்**

ஹார்திக் பாண்ட்யா (தலைவர்), புவனேஷ்வர் குமார் (உப தலைவர்), இஷான் கிஷன், ருதுராஜ் கெய்க்வாட், சஞ்சு சாம்சன், சூர்யகுமார் யாதவ், வெங்கடேஷ் ஐயர், தீபக் ஹூடா, ராகுல் திரிபாதி, தினேஷ் கார்த்திக் (விக்கெட் காப்பாளர்), யுஜவேந்திர சஹல், அக்ஸார் பட்டேல், ரவி பிஷ்னோய், ஹர்ஷல் பட்டேல், அவேஷ் கான், அர்ஷ்தீப் சிங், உம்ரான் மாலிக். (ஐ)

# 94 ஆண்டுகளில் காணாத தோல்வியில் இங்கிலாந்து

லண்டன், ஜூன் 17

ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நேஷன்ஸ் லீக் உதைபந்தாட்டப் போட்டியில் இங்கிலாந்து 0-4 என்ற கோல் கணக்கில் ஹங்கேரியிடம் சொந்த மண்ணிலேயே தோல்வி கண்டது.

இந்த ஆட்டத்தில் ஹங்கேரிக்காக ரோலண்ட் சலாய் (16’, 70’), சோல்ட் நேகி (80’), டானியல் கஸ்டாக் (89’) ஆகியோர் கோல் அடிக்க, கடைசி வரை ஒரு கோல்கூட அடிக்க இயலாமல் தோற்றது இங்கிலாந்து.

இதனால், கடந்த 94 ஆண்டுகளில் இல்லாத வகையில் சொந்த மண்ணில் மிகப்பெரிய தோல்வியை அந்த அணி சந்தித்துள்ளது. இதற்கு முன் கடந்த 1928ஆம் ஆண்டு இதேபோல் ஸ்கொட்லாந்திடம் 5 - 1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து தோற்றிருந்தது.

ஹங்கேரிக்கு எதிராக இங்கிலாந்துக்கு இது 3ஆவது மோசமான தோல்வியாகும். முதலில் 1953இல் சொந்த மண்ணில் 3 - 6 என்ற கோல் கணக்கிலும், அடுத்த ஆண்டிலேயே அந்நிய மண்ணில் 7-1 என்ற கோல் கணக்கிலும் வீழ்ந்திருக்கிறது இங்கிலாந்து.

சுமார் ஓராண்டுக்கு முன்னர் சொந்த மண்ணில் ஐரோப்பிய சம்பியன்ஷிப் இறுதியாட்டத்துக்கு முன்னேறியபோது ரசிகர்களால் கொண்டாடப்பட்ட இங்கிலாந்து அணி, இந்தத் தோல்விக்காக அவர்களிடமிருந்து அதிருப்தி குரலைக் கேட்டது.

தற்போது நேஷன்ஸ் லீக் போட்டிக்கான லீக் ஏ பிரிவின் குரூப் ‘3’ பட்டியலில் ஹங்கேரி 4 போட்டிகளில் 2 வெற்றிகளுடன் முதலிடத்தில் இருக்கிறது. ஜேர்மனி, இத்தாலி தலா ஒரு வெற்றியுடன் முறையே அடுத்த இரு இடங்களில் உள்ளன. இங்கிலாந்து வெற்றியின்றி கடைசி இடத்தில் இருக்கிறது. (ஐ)



## ஸ்ரீவெங்கடேஸ்வரா ஸ்ரீஅபிராமி திருமண மாலை

**முன்கட்டணம் $30**

Canada, France, Germany, Italy, U.K., Switzerland, India, Srilanka **நாடுகளிலுள்ள பட்டதாரிகள்,** Divorce **ஆனவர்களோடு எல்லா வகுப்பினர்கள் உட்பட 300 இற்கு மேற்பட்ட ஜாதகங்கள் படத்துடன் எம்மிடம் உள்ளன.**

**இலங்கையில் பெண் தேடும் கனேடிய ஆண்கள்**

**24.05.1981 உத்தராடம்** |Hay School **உயரம் 5.5**
**20.02.1990** University H.R **மூலம் உயரம் 5.7**
**30.10.1981** Hay School **கேட்டை உயரம் 5.9**
**29.05.1985 மகம்** Civil Eng **உயரம் 5.7**
**24.04.1981 பூரட்டாதி** Elect **உயரம் 5.5**
**28.06.1986** civil Eng **(ந)** University **உயரம் 5.7**
**27.10.1977 பரணி** Computer science **உயரம் 5.8**
Canada QTRLS University RC *1995* **உயரம் 5.2**
University Mapypak; H.R *03.12.1992* **உயிரம் 5.6**
**12.05.1992 உத்தரம் 3** University **உயரம் 5.3**
**06.09.1992 பூராடம்** Univer sity **உயரம 5.3**
**30.01.1989 சுவாதி** Univerdity Canada **உயரம் 5.7**
**31.05.1968** Divorce **வெள்ளாளர் இந்திய பெண்களானாலும் சம்மதம் தற்போது இவர் இலங்கையில் ஸ்பொன்சர் செய்வார்.**
**11.08.1975 மன்னூர் மனைவி இறப்பு - பிள்ளைகள் இல்லை.**

**வெளிநாடு விருப்பம்**
**1994.05.17 கடகம் பூசம் வேலை** HBC Bank

### வீட்டு குடிநீர் சுத்திகரிப்புக்கு மட்டும்

electric machine latest model
BIOTRON TECHNOLOGY (NRICH GOODNESS OF COPPER WITh CALCUM MAGNESIUM AND ZINIC
**ஒரே நேரத்தில்** *2000* MG/ LTDS LEVAL

**தொடர்பு: ராம் அலெக்ஷாண்டர்** Canada **6473894130**
**தற்போது யாழ்., மன்னார்**
**075 662 6005, 076 407 7529**


# நுரைச்சோலை அனல் மின் நிலையம் மீண்டும் இரு மாதம் மூடப்படுகிறது!

*கொழும்பு, ஜூன் 17*

நுரைச்சோலை அனல்மின் நிலையம் வழக்கமான பராமரிப்புக்காக நாளை முதல் இரண்டு மாதங்களுக்கு மூடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட வேண்டிய பராமரிப்புப் பணிகள் முடிவடைய குறைந்தது 75 நாட்கள் ஆகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. நுரைச்சோலை அனல் மின் நிலையம் தேசிய மின்கட்டமைப்புக்கு தினசரி 270 மெகா வோட்ஸ்களை வழங்குகிறது, நாடு கடுமையான எரிபொருள் நெருக்கடியில் இருக்கும் நேரத்தில், மின் உற்பத்தி நிலையத்தை மூடுவது நாட்டின் மின் நெருக்கடியை மேலும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. (ஐ)

# ரி. ஐ. டியினரின் விசாரணையை எதிர்கொள்ள நாடு திரும்புவேன்!

## முன்னணியின் பேச்சாளர் சுகாஷ் அறிக்கை

*யாழ்ப்பாணம், ஜூன் 17*

நான் நாட்டில் இல்லாத தருணத்தில் எனது வீட்டுக்குச் சென்று என்னை விசாரிக்க வேண்டுமென்று அச்சுறுத்துவது எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது என்று கூறியுள்ளார். அத்துடன், விசாரணையை எதிர்கொள்ள தான் நாடு திரும்புவேன் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் க. சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், "பயங்கரவாத விசாரணைப் பிரிவினருக்கு..." சட்டத்தரணி க. சுகாஷ் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நான் நாட்டில் இல்லாத தருணத்தில் எனது வீட்டுக்குச் சென்று என்னை விசாரிக்க வேண்டுமென்று அச்சுறுத்துவது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

சர்வதேச கருத்தமர்வு ஒன்றில் பங்கேற்பதற்காகவே கொசோவா, சிம்பாப்வே, சிரியா மற்றும் ஜோர்ஜியா நாட்டுப் பிரதிநிதிகளுடன் சுவிற்சர்லாந்தில் தங்கியுள்ளேன். உங்கள் செயல்பாடு தொடர்பாக இங்கும் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளேன். இதனால், உங்கள் நாட்டின் நற்பெயருக்கே (நற்பெயர் இருந்தால்) பாதிப்பேற்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

"இத்தகைய ஒரு நாட்டுக்கு திரும்பச் செல்லப் போகின்றீர்களா? இங்கு ஏதாவதொரு நாட்டிடம் புகலிடக் கோரிக்கையை முன்வைக்கலாமே" என்று இங்குள்ளவர்கள் கூறுகின்றார்கள்.

ஆனால், நான் நிச்சயம் விரைவில் இலங்கைக்குத் திரும்புவேன். உங்கள் விசாரணைகளுக்கு முகங்கொடுப்பேன். ஏனென்றால் எனது கைகள் சுத்தமானவை. எனது செயல்பாடுகள் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவை. நீங்கள் எனது குரலை அடக்கலாமே தவிர என் குரல்கள் தாங்கிவரும் கொள்கையை ஒருபோதும் அடக்கமுடியாது" என்றுள் ளது. (ஐ)


# வீட்டுத் தோட்டம் செய்வோம்

**வளம் கொழிக்கும் பூமி என**
**வரலாற்றின் அத்தனை பக்கங்களிலும்**
**பெயர் பொறித்த நம் தாய்நாடு.**
**இன்று அடிப்படைத் தேவைகளுக்காகவும்**
**உணவுக்காகவும் கை ஏந்த ஆரம்பித்திருக்கிறது.**
**மூன்று வேளை உணவு இருவேளையாகவும்**
**ஒரு நேரமாகவும் சுருங்கியிருக்கிறது.**
**பஞ்சமும் பட்டினியும் கண்முன்னே**
**நிழலாடுகின்றன...!**



## போதும்...! ஏந்திய கைகள் சற்றே உயரட்டும்

**நாம் வாழுப்போதுமான வளத்தை தன்னுள் வைத்திருக்கிறது நமது தாய்மண்!**

**வீட்டுக்கொரு தோட்டம் செய்வோம்**
**நமது பசியை நாமே போக்க...**
**எமது கைகளை சற்றே உயர்த்துவோம்!**

**பெரிதோ சிறிதோ... அவரவர் வீட்டுத் தேவைக்கு**
**போதுமான காய்கறிகளை நம் வீட்டிலேயே உற்பத்தி செய்வோம்...!**
**திட்டமிடலும் உழைப்புமே**
**நம்மையும் நம் நாட்டையும் காக்கும்!**

www.dantv.tv


# இ. தொ. க. உபதலைவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை!

*நுவரெலியா, ஜூன் 17*

நுவரெலியா பிரதேச சபையின் தலைவர் வேலு யோகராஜூக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணை நேற்று இடம் பெற்ற. இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை அவருக்கு உத்தியோகபூர்வ கடிதம் மூலமாக அறிவிக்கப்படவுள்ளது.

இதேவேளை, விசாரணைகளையடுத்து வேலு யோகராஜ் தமது இ. தொ. கா. உபதலைவர் பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

வேலு யோகராஜூக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஒழுக்காற்று நடவடிக்கைக் குழு அதன் தலைமையகமான சௌமிய பவனில் நேற்று வியாழக்கிழமை கூடியது.

நுவரெலியா பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட கந்தப்பளை நகரில் நுவரெலியா பிரதேச சபைக்கு அரசாங்கம் வழங்கிய காணி தொடர்பாக பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், இது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் நேற்று முழுமையாக ஆராயப்பட்டு, வேலு யோகராஜாவிடம் விசாரணை நடத்தப்பட்டது.

எதிர்வரும் திங்கட்கிழமை இவ்விசாரணையின் முடிவுகள் வேலு யோகராஜூக்கு உத்தியோகபூர்வமாக கடிதம் மூலம் அறிவிக்கப்படவுள்ளது. (ஐ)

## 50000 மெற்றிக்...

மானிக்கப்பட்டது.

இது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அரிசி தட்டுப்பாட்டைத் தவிர்க்கவும், அரிசி விலையில் அசாதாரணமான உயர்வைக் கட்டுப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இந்தியக் கடன் தொடர்பான கலந்துரையாடலில் வர்த்தக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ, பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா, முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அரச மற்றும் தனியார் துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

## பாடசாலைகளுக்கு...

துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## சீனாவின்...

தன்னாட்சி பிராந்தியம் உட்பட ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் சீனாவுக்கு மேற்கொண்ட பயணத்தை வரவேற்பதாகவும் இலங்கை தெரிவித்துள்ளது.

மேலும், சீன தரப்புக்கும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கும் ஒத்துழைப்பு மற்றும் முழுமையான பரிமாற்றம் இருந்ததை நாம் வரவேற்கிறோம்.

ஐ. நா. சாசனத்தின் பிரிவு 2இல் குறிப்பிடப்பட்டுள்ள இறையாண்மை மற்றும் தலையிடாமைக்கு மதிப்பளிப்பது பல தரப்பு மன்றங்களிலும் ஈடுபாட்டின் அத்திபாரமாக இருக்க வேண்டும். ஒரே சீனா கொள்கையை அந்த நாடு கடைப்பிடிக்கிறது. இதேகொள்கையையே இலங்கையும் தொடர்ந்தும் பின்பற்றுகிறது.

சம்பந்தப்பட்ட நாட்டின் சம்மதம் மற்றும் ஒத்துழைப்போடு எடுக்கப்படும் முயற்சிகள் உண்மையான உரையாடல் மற்றும் உற்பத்தித் திறனுக்கு பங்களிக்கும். எமது தேசிய முன்னுரிமைகளுக்கு இணங்க பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மனித உரிமைகள் ஆணையம் மற்றும் அதன் பொறிமுறைகளுடன் தொடர்ந்து ஈடுபடுவதற்கு இலங்கை தயாராகவுள்ளது - என்றும் இலங்கை பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## ஜூன் 24ஆம்...

என்று ஐக்கிய மக்கள் தொழில்சங்கப் படையின் பேச்சாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு எரிபொருளும் 60 ரூபாய்க்கும் அதிகமாக உயரலாம். எரிசக்தி அமைச்சின் செயலாளரின் கூற்றுப்படி, எரிபொருள் அதிகரிப்பு ஒவ்வொரு மாதமும் 24ஆம் திகதி நடைமுறைக்கு வர வேண்டும். சமீபத்தைய எரிபொருள் விலையுயர்வு மே 24ஆக இருந்தது.

92 ஒக்ரெய்ன் பெற்றோல் லீற்றருக்கு 74 ரூபாயும், 95 ஒக்ரெயன் பெற்றோல் லீற்றருக்கு 78 ரூபாயாலும், டீசல் லீற்றருக்கு 56 ரூபாயாலும் சுப்பர் டீசல் லீற்றருக்கு 65 ரூபாயாலும் மண்ணெண்ணெய் 210 ரூபாயாலும் அதிகரிக்கும் என்று பாலித மேலும் தெரிவித்தார்.

மேலும், விலை உயர்வு நடைமுறைக்கு வரும் வரையில் எரிபொருளை விநியோகிக்க முடியாத நிலையில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உள்ளனர். இதனால், 5,500 மெற்றிக் தொன் பெற்றோல் மற்றும் மெற்றிக் தொன் டீசல் இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனத்திடம் உள்ளது. இந்திய கடன் வசதியின் கீழ் 40 ஆயிரம் தொன் டீசல் நேற்று முன்தினம் நாட்டுக்கு வந்தது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் சீராக இயங்க தினமும் 6 ஆயிரம் தொன் டீசல், 5 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் தேவைப்படுகிறது. (ஐ)

## மே 09 வன்முறைகள் 2,814 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஜூன் 17

மே 9 நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வன்முறை சம்ப வங்கள் தொடர்பில், மேலும் 38 பேர் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

அத்துடன், 16 பேர் நீதிமன் றால் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

மே 9 அமைதியின்மை தொடர்பில், இதுவரையில் 857 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதுவரையில் 2814 பேர் கைதுசெய் யப்பட்டுள்ள நிலை யில், ஆயிரத்து 92 பேர் விளக் கமறியலில் வைக்கப்பட்டுள்ள னர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## மீண்டும்...

குறிப்பிட முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்தியாவிடமிருந்து 500 மில்லியன் டொலர் பெற்றுக்கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அரசின்...

திற்கு வழங்குவதில் ஆட்சேபனை தெரிவிக்க முடியாது என குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளராக இருக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

நாட்டில் கடுமையான எரிபொருள் நெருக்கடி நிலவும் நிலையில், உலக நாடுகளை கருத்திற் கொள்ளாமல் ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை பெற்றுக் கொள்ள அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார். (அ)

## 7 வயது...

கடந்த 10ஆம் திகதி மாணவி அடித்துத் துன்புறுத்தப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

சித்தன்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த ஹர்ஷா ஜெயதீசன் (வயது -7) என்ற மாணவியே அடித்து துன்புறுத்தப்பட்டார்.

கடுமையான மன அழுத்தத்துக்கு உள்ளாகிய மாணவிக்கு உளநல மருத்துவ வல்லுநரினால் உளநல சிகிச்சை வழங்கப்பட்டது என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

மாணவியின் குடும்பத்துக்கு பண உதவியை வழங்கி இணக்கமாக முடிக்கப் பாடசாலை நிர்வாகம் முயற்சிக்கும் நிலையில் சங்கானை பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## காங்கேசன்துறை...

கள். வட மாகாணத்தில் இருக்கக்கூடிய உரம் மற் றும் எரிபொருள் பற்றாக்குறை அதே போன்று அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை நாடு தழுவிய ரீதியில் ஏற்பட்டுள்ள அதே நேரத்தில் வடமாகாணமும் அதற்கு விதிவிலக்கில்லாமல் அதற்கு முகம் கொடுத்து வருகின்றது.

இந்த வகையில் எங்களது நீண்டகாலத் திட்ட முன்மொழிவு இந்தியாவிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்வதாகும். பாண்டிச்சேரி, காரைக்கால் அல்லது நாகபட்டினத்திலிருந்து நேரடியாக காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்குமதி செய்வதன் ஊடாக விரைவாகவும், நியாயமான முறையில் எமது மக்களுக்கு கிடைக்கக்கூடிய சூழலை உருவாக்குவோம்.

எரிபொருள், உரம், சிமெந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை ஆகியவற்றை நீக்கி வெகு விரைவில் மக்களிற்கு அது கிடைக்க செய்வோம் -என்றார். (அ)

# ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்படவேண்டும்

## சம்பந்தனின் கருத்தை வரவேற்கிறார் சஜித்



கொழும்பு, ஜூன். 17

நாட்டில் ஆட்சி மாற்றத்தைக் கோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கருத்தை வரவேற்கின்றோம். இந்த ஆட்சி மாற்றம் மக்கள் ஆணையுடன் ஜனநாயக வழியில் இடம்பெற வேண்டும். அதற்காக ஜனாதிபதித் தேர்த லும், பாராளுமன்றத் தேர்தலும் விரைந்து நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையின் தற்போ தைய அரசியல், பொருளா தார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண வேண்டுமெனில் ஆட்சி மாற்றம் கட்டாயம் வேண்டும் என்று வலியுறுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கருத்தை நாம் வரவேற்கின்றோம். எமது கட்சியினதும் நிலைப்பாடும் இதுவாகவே உள்ளது.

தற்போதைய ஆட்சியில் சூதாட்ட அரசியல் சூடுபிடித்துள்ளது. இது நாட்டுக்குக் கேவலமானது. அதேவேளை, இந்த ஆட்சியால் நாள்தோறும் வீதிகளில் வரிசைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அனைத்துப் பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொருட்களின் விலையும் நாள்தோறும் சடுதியாக உயர்வடைந்து வருகின்றது. மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆட்சி மாற்றம் நிகழ்ந்தால்தான் எமது நாடு மீண்டெழ சர்வதேசம் கைகொடுக்கும். இந்த அராஜக ஆட்சி தொடர்ந்தால் அதாள பாதாளத்தில் விழுந்து கிடக்கும் நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்த முடியாது. எனவே, ஆட்சி மாற்றம் உடன் அவசியம்.

ஆட்சி மாற்றம் மக்கள் ஆணையுடன் ஜனநாயக வழியில் இடம்பெற வேண்டும். அதற்காக ஜனாதிபதித் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் விரைந்து நடத்தப்படவேண்டும்-என்றார். (அ)

# எரிபொருள் விநியோகம் இனி புதிய முறையில்!



கொழும்பு, ஜூன். 17

எரிபொருள் விநியோகத் திட்டத்தை இலகுபடுத்த, எதிர்வரும் ஜூலை மாதம் முதல் புதிய முறைமையொன்றை உருவாக்க எதிர்பார்த்துள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவிக்கின்றார்.

இதன்படி, அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எரிபொருளை அட்டை முறைமையின் அடிப்படையில் விநியோகிக்கும் வகையிலேயே, இந்தத் திட்டம் அறிமுகப் படுத்தப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின்போதே, அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனைக் குறிப்பிட்டார். (அ)

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஆர். எஸ். எஸ். உறுப்பினர் சந்திப்பு!

சென்னை, ஜூன் 17

இந்தியாவின் ஆர். எஸ். எஸ். உறுப்பினர் ஒருவர் இலங்கைக்கு வந்து இலங்கை பிரதமரை சந்தித்தார் என்று தகவல் வெளியிட்டுள்ள இந்திய ஆங்கில ஊடகம் ஒன்று, அவர் யாரை பிரதிநிதித்துவம் செய்தார் என்ற கேள்வி எழுந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அதானி குழுமத்துக்குப் புதுப்பித்தக்க வலுசக்தி திட்டம் வழங்கப்பட்டுள்ளமை குறித்து இலங்கையில் உருவாகியுள்ள சர்ச்சைகளின் மத்தியில் கொழும்பிற்கு ஆர். எஸ். எஸ். அமைப்பின் உறுப்பினர் ராம் மாதவ் சென்றுள்ளமை, பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

இந்திய அரசாங்கத்தில் உத்தியோக பூர்வ பதவிகள் எதனையும் வகிக்காத ராம்மாதவ் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளார்.

அவர்கள் மேலும் இந்தியாவின் உதவியை முதலீட்டை எவ்வாறு பெறுவது என்பது குறித்து ஆராய்ந்துள்ளனர், மாதவ் யாரை பிரநிதித்துவம் செய்தார் என்பது தெரியாது.

இலங்கையில் அரசியல் பொருளாதார ஸ்திரமின்மை காணப்படும் நிலையில்- இந்தியா தனது உதவிகள் எந்த நிபந்தனையும் அற்றவை என்ற செய்தியை தெரிவிக்க முயல்கின்ற சூழலில் முக்கிய அரசியல்வாதி வெளியிட்டுள்ள சமிக்ஞைகள் குறித்து கரிசனைகள் வெளியாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இலங்கைக்கு...

மக்களுக்கு அமெரிக்கா உதவும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

வளர்ச்சிக்கான நீண்டகால பங்காளி என்ற வகையில், நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் சிறந்த நிர்வாகத்தை ஊக்குவிக்கும் முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுப்பதாக அவர் கூறியுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu







# புலோலியில் மக்கள் போராட்டம்!



யாழ்ப்பாணம், ஜுன் 17

பருத்தித்துறை புலோலி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கருகில் மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அதிகாலை முதல் மக்கள் எரிபொருளுக்காக காத்திருந்த நிலையில் மதியத்திற்கு பின்பே எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் பின் மின்துண்டிப்பை காரணம் காட்டியும், கடமை நேரம் முடிந்துவிட்டதாகக் கூறியும் எரிபொருள் விநியோகக்கத்தை இடைநிறுத்தியதால் அதிருப்தியடைந்த மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அழைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. (அ)

# அரபு நாடுகளின் தூதுவர்களை சந்திக்கும் ஏற்பாடுகள் ஆரம்பம்!

கொழும்பு, ஜுன். 17

அரபு நாடுகளின் தூதுவர்களை சந்திக்கும் முன்னோடி ஏற்பாடுகளில், சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹ மட் இலங்கைக்கான சவூதி அரேபிய பதில் தூதுவர் அப்துல்லா எ,எ, ஒர் கோபியை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

இரு தரப்பு உறவுகளை பலப்படுத்தும் சந்தர்ப்பமாக இப்பேச்சுக்கள் அமைந்திருந்தன.

அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகரும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான கருணாசேனா ஹெட்டியாராய்ச்சி மற்றும் சிரேஷ்ட இராஜதந்திரியான ரி,ஷற்,ஏ சம்சுடீன் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அமைச்சில் நடைபெற்ற இச்சந்திப் பில் சுற்றாடல் துறையின் மேம்பாடு களால் அடையக்கூடிய அதிகளவான நன்மைகளை அடையாளங்காணல் மற்றும் அவற்றை நடைமுறைபடுத்து வதில் இருநாடுகளும் ஒத்துழைத்துச் செயற்படல் என்பது பற்றி பிரதானமாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இலங்கை எதிர்கொண்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு,சவூதி ஒத்துழைக்க வேண்டியதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது. முறையான எரிபொருள் விநியோகம் இன்னும் இலங்கை ஹஜ்யாத்திரிகர்களுக்கு விசேட வசதிகளை ஏற்படுத்தல் உள் ளிட்ட விவகாரங்களையும் அமைச்சர் நஸீர் அஹமட் சவூதிஅரேபிய தூது வரிடம் எடுத்துரைத்தார்.

சவூதியில் பணிபுரியும் இலங்கை தொழிலாளர்களின் விடயங்களிலும் இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது. (அ)

## துயர் பகிர்வு



**விக்கினேஸ்வரநாதன் வாகீஸ்வரி**

26 ஆண்டுகளாக சிறையில் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதியான விக்னேஸ்வரநாதன் பார்த்திபன் அவர்களின் பேரன்புத் தாயார், விக்கினேஸ்வரநாதன் வாகீஸ்வரி அவர்கள் 15.06.2022 புதன் கிழமையன்று தனது 79 ஆவது வயதில் இறைபதம் அடைந்துள்ளார்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரியை வாழ்விடமாகக் கொண்ட அன்னார், கடந்த 25 ஆண்டுகளில் தனது அன்பு மகனின் விடு தலைக்காக உடல் வலுவுள்ளவரை போராடி நோய்வாய்ப்பட்டிருந்தார்.

இவர், தனது இறுதி வாழ்நாட்களில், "என்ரை பிள்ளைக்கு என்ரை கையாலை ஒருபிடி சோறெண்டாலும் ஊட் டிப்போட்டுத் தான் உயிரை விடுவன். அவன்ரை மடியிலை தான் என்ர சீவன் போகும். அவன்தான் எனக்கு கொள்ளி வைக்க வேணும்." என்று உறுதியோடு நம்பிக்கொண்டிருந்தார்.

ஆனபோதும், அந்தத் தாயாரின் ஏக்கத் தவிப்பு நிறை வேறாமலே, அவர் விண்ணுலகை சென்றடைந்தமை பெருந்துக்கமே.

இந்த ஈழத் தாயின் கனவு விரைவில் மெய்ப்பட வேண்டுமென்று, மனித நேயங்கொண்ட நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக..

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய, "தமிழ் அரசியல் கைதிகள் சார்பாக குரலற்றவர்களின் குரல் அமைப்பு கண் ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி இறையருளை வேண்டி நிற்கிறது.

அத்துடன், பெற்ற தாயின் இழப்புத் துயரை உறவுகளோடு பகிர்ந்து கொள்ள முடியாமல் சிறையறைக்குள்ளிருந்து வெந்து கொண்டிருக்கும் பார்த்தீபனுக்கும், அவரது குடும்ப உறவுகள், நட்புகளுக்கும் குரலற்றவர்களின் குரல் அமைப்பு தனது இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

மு.கோமகன்,
ஒருங்கிணைப்பாளர்,
குரலற்றவர்களின் குரல்.

# சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு



கொழும்பு, ஜுன். 17

சுற்றுலாப் பயணிகளின் வருகை மீண்டும் அதிகரித்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

நாளாந்தம் குறைந்தது 920 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தருவதாக சுற்றுலா அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக நாட்டில் நிலவும் அமைதியற்ற சூழ்நிலை காரண மாக சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

இந்தநிலையில் தற்போது இந்தியாவி லிருந்து அதிகமான சுற்றுலாப் பயணி கள் நாட்டிற்கு வருகை தருவார்கள் என சுற்றுலா அபிவிருத்தி சபையின் பணிப் பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பல்வேறு ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத் தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# போலி ஆவணங்கள் மூலம் வவுனியாவில் காணி விற்பனை!

வவுனியா, ஜுன் 17

வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் போலி ஆவணங்கள் மூலம் காணிகள் விற்பனை செய்யப்பட்டு வருவதால் காணி கொள்வனவாளர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இவ்வாறு விற்கப்படும் காணிகளில் பல புலம்பெயர் நாட்டில் வசிப்பவர்கள் மற்றும் பல ஆண்டுகளாக துப்பரவு செய்யப்படாமல் காணப்படும் காணிகள் எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் புலம்பெயர் தேசங் களில் உள்ளவர்கள் தங்கள் காணிகள் தொடர்பான ஆவணங்களை மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகத்தில் உள்ள காணிக் கிளைகளில் சரி பார்த் துக்கொள்ள வேண்டும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காணிகளை கொள் வனவு செய்பவர்கள், குறித்த காணிக் கான ஆவணங்களின் பிரதிகளை காணி விற்பனையாளரிடம் பெற்று அதனை மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக காணிக்கிளைகளில் கொடுத்து, அது தொடர்பான உண்மையான உரி மையாளர் மற்றும் காணியின் தன்மை தொடர்பில் ஆராய்ந்த பின்னரே கொள்வனவு செய்யவேண்டும எனவும் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய சூழலில் பலரும் விவ சாயம் தொடர்பில் அதிக ஆர்வம் செலுத்தி வரும் நிலையிலேயே சில மோசடிக்காரர்கள் இவ்வாறு புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் உள்ளாநாட்டில் காணிகளை பராமரிப்பதற்கு போதிய வசதியில்லாதவர்களின் காணிகளை அடையாளம் கண்டு போலி ஆவணங் களை தயாரித்து விற்பனை செய்யப்படு வதாகவும் சமூக ஆர்வலர்கள் தெரிவித் துள்ளனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.யாழ்பாவாணன்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**

12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-இன்று நேற்று நாளை, கதகளி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10

**இரவு**

7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -வெகுஜனப்போராட்டங்கள்-02



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு